Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 10
போன் 389 National Tamil Daily இதழ் 56
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க பங்குனி 24 முஹறம் 7 சனிக்கிழமை (6-4-68)

போன் 7199
தங்கம் வைரம்
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# அமெரிக்க நீக்ரோத் தலைவர் மார்ட்டின் லூதர்கிங் படுகொலை

## ஹோட்டல்மாடியில் நின்றபோது துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது

### வெள்ளையர் இருவர் கைது

வாஷிங்டன், ஏப்ரல் 5

**அமெரிக்க சிவில் உரிமைப் போராட்ட நீக்ரோத் தலைவரான வண. டாக்டர் மார்டின் லூதர் கிங், இன்று அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்கு வயது 39 ஆகும்.**

அமெரிக்காவிலுள்ள டென்ஸி மாகாணத்தில், மெம்பிஸ் என்னும் பட்டினத்தில் அவர் தங்கியிருந்த ஹோட்டலில் இரண்டாவது மாடி அறைக்கு வெளியேயுள்ள மாடத்தில் அவர் நின்று கொண்டிருக்கையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினார் சூடு அவரது தலையில் பட்டது. ஆஸ்பத்திரிக்கு அவர்விரைந்துகொண்டு செல்லப்பட்டார். ஆனல், அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து, ஹோட்டலைச் சுற்றிப் பொலிசார் பலத்த காவல் போட்டதுடன், யாரும் பிரவேசியாது தடைசெய்துவிட்டனர்.



**ஊரடங்கு உத்தரவு அமுல்**

கொலை நடைபெற்ற மெம்பிஸ் நகரில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாகாண கவர்னர் 40,000 தேசிய காவற்படையினரைத்தெருக்களில் ரோந்து சுற்றுமாறு உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்காவின் பிரபல துப்பறியும் பொலிஸ் நிறுவனமாகிய எவ். பி. ஐ. புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் சம்பந்தமாக, நல்ல உடையணிந்த ஒரு வெள்ளையரைப் பொலிசார் தேடிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு வெள்ளையர்களைப் பொலிசார் ஏற்கனவே கைதுசெய்துள்ளனர். ஹோட்டலுக்கருகே துப்பாக்கியொன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

டாக்டர் மார்டின் லூதர் கிங், கடந்த வியாழனன்று மெம்பிஸ் பட்டினத்தில் ஆரம்பித்த அமைதியான ஆர்ப்பாட்டமொன்று, பின்னர் கலவரத்தில் முடிந்தது கலவரத்தில், பொலிசார் சுட்டதன்விளைவாக நீக்ரோ இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

டாக்டர் கிங், மீண்டும் ஓர் ஆர்ப்பாட்டத்தை அடுத்த திங்களன்று நடத்த உத்தேசித்திருந்தார்.

டாக்டர் மார்டின் லூதர் கிங், 1964ல் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. நீக்ரோ மக்கள் தமது உரிமைகளைச் சாத்வீக முறையில் போராடிப் பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டியாக விளங்கியவர் டாக்டர் கிங்.

**ஜோன்சன் கோரிக்கை**

டாக்டர் கிங் சுடப்பட்ட செய்தியைக் கேட்டுத் தாம் மிகவும் மனவருத்தமடைவதாக அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் கூறியுள்ளார். கிங் சுடப்பட்டு ஒரு மணி நேரத்தில் நாடெங்கும் ஒலிபரப்பப்பட்ட டெலிவிஷன் நிகழ்ச்சியில் தோன்றிய அமெரிக்க ஜனாதிபதி கண்மூடித்தனமான பலாத்காரத்தை நிராகரித்துவிடுமாறு ஒவ்வொரு அமெரிக்கப் பிரஜையையும் கேட்டுக்கொண்டார்.

வியட்நாம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவென நேற்று ஹொனலுலு புறப்படவிருந்த ஜனாதிபதி தமது விஜயத்தை இன்றுவரை ஒத்திப் போட்டுள்ளார்.

## அமெரிக்க நகரங்களில் இனக்கலவரங்கள்

### பலாத்காரம் பரவுவதைதடுக்க பலத்தநடவடிக்கை

கடைசியாக வாஷிங்டனிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் டாக்டர் கிங் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்காவின்பிரதான நகரங்கள் பலவற்றிலும்இனக்கலவரங்கள்வெடித்துள்ளதாகக் கூறுகின்றன

ஆத்திரமடைந்த நீக்ரோக்கள் பலஇடங்களிலும் பலாத்காரச் செயல்களில் இறங்கியுள்ளனர்.

அமெரிக்க நகரங்கள் பலவற்றில் நீக்கிரோக்கள் தீக்குண்டுகளுடன் தெருக்களில் சுற்றுகிறார்களாம். சில பகுதிகளில் பொலிசாருடன் நீக்கிரோக்கள் தெருச் சண்டைகளில் இறங்கியுள்ளார்களாம்.

டாக்டர் கிங் சுட்டுக் கொல்லப்பட்ட இடமான மெம்பிஸ் நகர் முழுவதும் கலவரங்கள் நிகழ்ந்தன. மற்றும் பர்மிங்காம் புரூக்லின் பொஸ்டன் ஜாக்ஸன் வாஷிங்டன் ஆகிய பட்டினங்களிலும் ஆர்ப்பாட்டங்களும் வன்முறைச் சம்பவங்களும் நடந்துள்ளன.

எல்லா நகரங்களிலும் தேசிய காவற்படையினரும் பொலிசாரும் அமைதியை

(8ம் பக்கம் பார்க்க)

## நீக்ரோ தலைவர்களுக்கு ஜோன்சன் அழைப்பு

வாஷிங்டன், ஏப். 5

வண. மாட்டின் லூதர் கிங் சுட்டுக் கொலைப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள இனக்கலவரங்களை நிறுத்தவும், அமைதிக்கு வழிவகுக்கவும்ஆலோசனைகள் நடத்துவதற்காக நீக்ரோக்களின் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த தலைவர்களையும் ஜனாதிபதி ஜோன்சன் அழைத்திருக்கின்றார்.

இனக்கலவரங்கள் சம்பந்தமாக இதுவரை சுமார் 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இரு வெள்ளையர் நீக்ரோக்களால் அடித்துக் கொல்லப்பட்டிருப்பதாகவும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறின

## 'மாவட்டசபைக்குமுன் பல்கலைக்கழகம் வேண்டும்''

### ஜி. ஜி. கோரிக்கை

குரும்பசிட்டி, வெள்ளி

''மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படு முன்னர் யாழ்ப்பாணத்தில் இராமநாதன் ஞாபகார்த்தமாக பல்கலைக்கழகம் அமைக்க தேசிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ் இனத்தவரின் சார்பில் வேண்டுகோள் விடுகின்றேன்''

இவ்வாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் சுன்னகம் இராமநாதன்இசைக்கல்லூரி பெற்றோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில்குறிப்பிட்டார்.

கலாநிதி சு. நடேசன் ஞாபகார்த்தமாக நூல்நிலையமொன்றை திரு. பொன்னம்பலம் இராமநாதன் கல்லூரி வளவில் இன்று மாலை திறந்து வைத்தார்.

இவ்விழாவிற்கு திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமை வகித்தார்.

திரு. பொன்னம்பலம் எம். பி. மேலும் கூறியதாவது: சிங்கள மக்கள் மத்தியிலுள்ள எந்த அரசியற்கட்சிகளும் யாழ்நகரில் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதை எதிர்க்கவில்லை. தற்போதய அரசாங்கம் தனது மூன்று வரவு-செலவு திட்டங்களிலும் இதற்கு முன்னர் இருந்த அரசாங்கம் இரண்டு தடவைகளிலும் இந்துப்பல்கலைக்கழகத்துக்கு அடையாள மானியம் ஒதுக்கியிருந்தன. ஆனல் தமிழ் தலைவர்களில் சிலர் தமிழ் இனத்துக்கு நன்மை பயக்கும் காரியம் நிறை வேற எதிர்ப்பும் முட்டுக்கட்டையும் ஏற்படுத்துவதுவருந்துவதற்குரியது.

(8ம் பக்கம் பார்க்க)

## வடபகுதியில் 10 தினங்கள் ஆலயப்பிரவேச நடவடிக்கை

### இந்து மாமன்ற கூட்டத்தில் தகவல்

மருதானை, வெள்ளி

ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் இம்மாதம் 12-ந் திகதியிலிருந்து பத்து தினங்களுக்கு வடபகுதியில் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

இன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஓய்வ பெற்ற நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை இந்து மாமன்ற கூட்டத்தில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் 12-ந் திகதி வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக கூட்டமொன்றை நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. 5 பேர் கொண்ட குழுவொன்றை வடபகுதியின் ஒவ்வொரு பகுதியிலும் தெரிவு செய்து, ஆலயப் பிரவேசம் சம்பந்தமான வேலைகளில் ஈடுபடச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

அரசாங்க சேவைகள்
கல்விப்பகுதி

என் 828-யா/பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகம், யா/கனிட்ட தொழில்நுட்பப் பாடசாலை, பயிற்சிக்கலாசாலைகள் ஆகியவற்றின்கட்டடங்கள் அமைத்தல், கூரை திருப்பி அமைத்தல், மலகூடங்கள் அமைத்தல். கேள்விகள்முடிவு திகதி 28/4/68.

இதன் முழு விபரங்களுக்கும் 4/4/68இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1ம்பகுதி 11ம்தொகுதியைப் பார்க்கவும். G.P. 2372

## ''விரைவில் குறைநீங்கும்''

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை உபதபாற் கந்தோரில் காசுக்கட்டளை, தபாற்கட்டளை, மாற்றுவதில் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை சரவணைக் கிராம முன்னேற்றச்சங்கம் வடபகுதி தபாற்தந்தி அத்தியட்சகருக்கு முறையிட்டதைத் தொடர்ந்து, தபால் தந்தி அத்தியட்சகர், விரைவில் இக்குறைபாடு தீர்க்கப்படுமென அறிவித்துள்ளார்.

## கசிப்பு வேட்டை

மல்லாவி, வெள்ளி

வவுனிக்குளக் குடியேற்றத்திட்டத்திலுள்ள 3-ம் யூனிற்றில் சிலர்சட்டவிரோதமாகக் கசிப்புத் தயாரிக்கிறார்களென யோகபுரம் பாரதி கி. மு. சங்கமும் இப்பகுதி மக்களும் தெரிவித்திருந்த புகாரைத் தொடர்ந்து கிளிநொச்சி மதுபானத் தீர்வை ஸ்தாபன அதிபர் திரு. எஸ். கந்தசாமியும் அவரது உதவியாளர்களும் கசிப்புவேட்டை நடாத்தினார்கள். அவர்களுக்கு உதவிபுரியச்சென்ற அப்பகுதி இளைஞர் க. சிவசுப்பிரமணியத்திற்கு ஒருவர் துப்பாக்கியால் சுடமுனைந்ததாகவும் ஒருசிலரின் முன்எச்சரிக்கையினுல் இளைஞர் காப்பாற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது.

### பதவி உயர்வுடன் இடமாற்றம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராமசபையில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. எம். பரமானந்தம் மே மாதம் முதல் மன்னார் மாவட்டத்திலுள்ள பேசாலை கிராமசபைக்கு செயலாளராகப் பதவியுயர்வு பெற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## மீண்டும் அங்கொடைக்கு அனுப்பப்பட்டார்

வல்வெட்டித்துறை, வெள்ளி

கம்பளையைச் சேர்ந்த கதிரேசு என்ற வாலிபர் தான் ஒரு இரசியப் பொலிஸ் உத்தியோகத்தன்எனச் சொல்லி கடந்தவருடம் டிசம்பர் மாதம் 9-ந் திகதி பருத்தித்துறையிலுள்ள விற்பனவு நிலையமொன்றை சோதனையிட்டதாக பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மஜிஸ்திரேட் திரு. கே. விக்கிலராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணைக்கு பின்னர் மாஜிஸ்ரேட் எதிரியை அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டு மீண்டும் சென்றமாதம் 31ந் திகதி கோட்டில் ஆஜராகும்படியும் கட்டளையிட்டிருந்தார். எதிர் குறிப்பிட்ட நாளில் கோர்ட்டில் ஆஜரானபோது அவரின் நிலைமை திருப்தியளிக்காமல் இருப்பதைக் கண்ட மாஜிஸ்திரேட் மீண்டும் அங்கொடைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டு மீண்டும் இம்மாதம் 18-ந் திகதிக்கு கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

கண்டியில்

## இராணுவவீரர் மருந்து தெளிக்கின்றனர்

கண்டி, வெள்ளி

மலேரியா நோய் கண்டிப் பகுதியில் பரவாவண்ணம் தடுக்கும்வகையில் கண்டி மாநகரசபை எடுத்துக் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து சுமார் 60 இராணுவ வீரர்கள் கண்டி வந்து மருந்து தெளிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

மகாவலிகங்கையை அடுத்துள்ள அரைமைல் சுற்றுவட்டாரத்திற்குள் மருந்து தெளிக்கும் வேலை நடைபெற்றுவருகிறது. கண்டி மாநகரசபையின்எல்லைக்குள் இருக்கும் வீடமைப்பு திட்டங்களான வட்டபுலுவ, தெய்யன்னவெல, அருப்பொல லேவல்ல, தம்கொல்ல. ஆகிய இடங்களில் ஜனக்கூட்டம் அதிகமாக இருப்பதால், ராணுவ வீரர்கள் இப்பகுதிகளிலேயே மலேரியா தடுப்பு மருந்தை தெளிக்க ஆரம்பித்தனர்.

## ரூபா500பிணையில் செல்ல அனுமதி

வல்வெட்டித்துறை, வெள்ளி

உடுப்பிட்டியைச் சேர்ந்த பொன்னையா மயில்வாகனம் என்பவருடைய கடையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ரூபா 125 களவு போனது சம்பந்தமாக வல்வெட்டித்துறை பொலிசில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அதே இடத்தைச் சேர்ந்த வி. தளையசிங்கம், கே. சுந்தரலிங்கம், பி. சதாசிவம் ஆகிய மூவரையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மாஜிஸ்திரேட் சந்தேக நபர் மூவரையும் தலா ரூபா 500 ரூபா பிணையில் செல்லுமாறும் மீண்டும் இம்மாதம் 11-ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## ஓய்வு பெற்றுர்

உடுவில், வெள்ளி

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாசாலையில் ஆசிரியையாக கடமையாற்றிவந்த திருமதி மெஞ்ஞான பூரணம் சதாசிவம் தமது சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் 1929-ம்ஆண்டு ஆசிரிய தொழிலில்ஈடுபட்டார்.

## ஓய்வு பெறுகிருர்

உடுவில், புதன்

அளவெட்டி அருணுசல வித்தியாசாசாலையின் தலைமையாசிரியர் திரு. கந்தையா கனகசபை தமது 40 வருடகால சேவையின் பின் ஓய்வுபெறவிருக்கின்ருர்.

இவர் கட்டுவன் ஞானோதயாவித்தியசாலையில் தலைமையாசிரியராகவும் கடமையாற்றினுர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோழிகள், குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒஸ்ரேலைப் வைற்லெக்கோன் நியூகம்ஷியர், ஆசீர்வாதம், சென். பீற்றர்ஸ் பாம், கோண்டாவில். 1409

(1) 16 'போர்' துப்பாக்கி, நல்லநிலையில் சுத்தம் செய்யும் கருவிகள் தோட்டாக்களுடனும் (2) 35 மி. மீ. புகைப்பட காமரா, தோல் பையுடனும் பிலிம்களுடனும் ஆக்கூடியவிலை கொடுப்பவருக்கு. நாகேந்திரன், ஒய்வுபெற்ற மின்சார என்ஜினியர், 'கைலாசம்', திருநெல்வேலிவடக்கு 1408

### தேவை

யாழ் நகரிலுள்ள பிரபல ஸ்ருடியோவில் வேலை பழகுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் 15-4-68-க்கு முன் விளம்பர இல 1504 மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1504

## ''இவைகளை மறக்கலாமா''

திருகோணமலை, வெள்ளி

'நாம் எதை மறந்தாலும் மொழி, கலாசாரம், இனம் ஆகியவற்றை மறக்கலாகாது. இவற்றை ஆக்குவதற்காக எம்மை மாற்றுவதும் எங்கள் கையிலேதான் உள்ளது'' என்று தேசிய அரசாங்கத்தின் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், திரியாய்மக்கள் அளித்த வரவேற்பின் போது கூறினுர்.

இக் கூட்டத்தில் திருமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராசா உட்படப் பலர் பேசினர்.

வெளிவந்து விட்டது
இலக்கண விபரம்
ஆசிரியர்: க. வீரகத்தி.
O இவ்வாண்டு க.பொ.த. [உயர்தரம்] தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களுக்கெனச் சிறப்பாக எழுதப்பட்டது.
O ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை இறுதி வகுப்புமாணவர்களுக்கும், G.A.Q. தேர்வு நாடு நருக்கும், இலக்கண ஆய்வாளருக்கும் பெரிதும் துணை புரியும்.
நிர்வாகி, விலை: ரூபா- 2-00.
வான்முகில் பதிப்பகம், கரவெட்டி. 701

''யாழ்ப்பாணக் கிளை''
டபிள்யூ. எஸ். பெருண்டோ அன் சன், (நீர்கொழும்பு)
திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள் சம்பந்தமான சகல ஒழுங்குகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். புத்தம் புதிய பூக்கள், பூச்செண்டுகள், மலர் வளையங்கள் எம்மிடம் கிடைக்கும். பல ரகப் பிரேதப் பெட்டிகள் எம்மிடம் உண்டு. பிரேதம் கெடாதபடி பாதுகாத்துவைப்பதில் நவீன முறைகள் கையாளப்படும். பிரேதம் கொண்டு செல்லும் நவீன வண்டிகள் உண்டு. ஞாபகச் சின்னங்கள் சிறந்த வகையில் அமைத்துக் கொடுக்கப்படும்.
இரவு பகல் எந்நேரமும் சேவை அளிக்கப்படும்.
சலார் சகாயம்.
84, பாங்ஷால் வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.


உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான
''வைத்திலிங்கம்ஸ்''
இரும்பு - பித்தளை மர ஸ்குறு
ஆணிகளை
நீங்கள் வாங்குவதனுல்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.
தயாரிப்பாளர்கள்:-
என். வைத்திலிங்கம்நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு, கொழும்பு. 12
தொலைபேசி: 7143 — 2029
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 &9-45 p. m.
Mukey Hargity
in
THE SHERIFF WON'T SHOOT
[Color]

REGAL JAFFNA
Daily at 10-30,
4-45, -7-00, & 9-45 p.m.
THE GREAT
TRAIN ROBBERY
[crime thriller depicting the recent London Train Robbery]
All passes Suspended

104-வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-30
போயாதினங்களில்4காட்சி
நடிக்கும்
காவல்காரன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
இங்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்)



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் ஐ. நா. வுக்குத் திடீர் விஜயம்

## யூ தாண்டைச் சந்தித்து வியட்னும் பற்றிப் பேசினுர்





நியூயோர்க், ஏப்ரல் 5

அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சன் நேற்று, ஐ. நா. தலைமைக் காரியாலயத்துக்கு திடீர் விஜயம் செய்து ஐ. நா. பொதுக் காரியதரிசி யூதாண்டைச் சந்தித்து வியட்னும்பற்றிப் பேசினுர்.

வியட்னுமிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் அமைதி ஏற்படுத்துவதையிட்டு ஜனதிபதி ஜோன்சன், பொதுக்காரியதரிசியுடன் சுமார் ஒரு மணி நேரம்வரை பேசினுர்.

பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் பத்திரிகையாளரிடம் பேசுகையில், யூதாண்டுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பயனுள்ளவையாக அமைந்துள்ளதாக ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார்.

திரு. ஜோன்சனை ஐ.நா. தலைமைக் காரியாலயத்தில் வைத்து, பொதுக்காரியதரிசி யூதாண்ட், ஐ. நா. அமெரிக்க தூதுகோஷ்டித்தலைவர் திரு. கோல்ட்பேர்க், டாக்டர் ரால்ப் பஞ்ச் ஆகியோர் வரவேற்றனர்.

பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் ஜோன்சன், வாஷிங்டன் திரும்பினுர். ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட்டைத் தாம் வாஷிங்டனுக்கு, மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்த அழைக்கவிருப்பதாக ஜோன்சன் தெரிவித்தார்.

ஜோன்சன் - யூதாண்ட் பேச்சுவார்த்தைகள் பற்றி ஐ. நா. அதிகாரி ஒருவரிடம் கேட்கப்பட்டபோது, வியட்னும் அமைதி பற்றி முக்கியமாகவும், தென்கிழக்காசிய நிலைமைபற்றிப் பொதுவாகவும் பேசப்பட்டதாகவும், இப்பேச்சுவார்த்தைகள் தனிமையில் நடைபெற்றதாகவும் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகள்பற்றி யூதாண்ட் பின்னர் குறிப்பிடுகையில், அவை திருப்திகரமாக அமைந்ததாகக் கூறினுர். வியட்னும் சமாதானத்துக்கு திரு. ஜோன்சன் ஒரு நல்ல ஆரம்பத்தைத் தந்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐஸனேவரை ஜோன்சன் கலிபோர்னியாவில் சந்திப்பார்

இதற்கிடையில், அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குத் தான் தயாராகவுள்ளதாக வட வியட்னும் அறிவித்துள்ளதைத்தொடர்ந்து வடவியட்னும் பிரதிநிதிகளுடன் நடத்தவேண்டிய பேச்சுக்கள்பற்றி ஆராய, ஹொனேலூலுவில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளச்செல்லும் ஜனதிபதி ஜோன்சன், வழியில், கலிபோர்ணியாவில்முன்னுள் அமெரிக்க ஜனதிபதி ஐஸனேவரைச் சந்தித்துப் பேசுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹொனேலூலுவில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில், அமெரிக்க வெளியுறவு மந்திரி டீன் ரஸ்க்கும், வியட்னும் அமெரிக்கத் துருப்புகளின் தலைவரான ஜெனரல் வெஸ்மோர்லண்டும் கலந்து கொள்வார்களெனத் தெரிகிறது.

### பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் உறுதி

லண்டனில் காமன்ஸ் சபையில் நேற்றுப்பேசுகையில், பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன், ஜெனீவா மாநாட்டு இணைத் தலைமை நாடுகள் என்ற முறையில் பிரிட்டனும் ரஷ்யாவும் வியட்னுமில் அமைதி காண்பதற்குத்தம்மாலான முயற்சிகளை எடுக்கத் தயாராகவிருப்பதாகக் கூறினுர்.

## வட வியட்னும் - அமெரிக்க பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை

### பூர்வாங்க ஆலோசனைகள் மாஸ்கோவில் நடைபெறும்

அமெரிக்க, வட வியட்னும் பிரதிநிதிகளின் உத்தேச சமரச பேச்சுவார்த்தைகள் பற்றிய பூர்வாங்க ஆலோசனைகள், இரு சாராருக்குமிடையே மாஸ்கோவில் நடைபெறுமென மாஸ்கோவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா, வட வியட்னும் மீதான குண்டு வீச்சை பெருமளவில் நிறுத்திஞல், பெரிய தாக்குதல் எதிலும் வட வியட்னும் ஈடுபாடாது என்று வடவியட்னும், தனிப்பட்ட முறையில் ரஷ்யாவிடம் தெரிவித்துள்ளதாக ரஷ்ய வட்டாரங்கள் கூறுகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வடவியட்னும் இசைந்துள்ளதற்கு முக்கியத்துவம் அளித்து மாஸ்கோ ரேடியோ நேற்றுச் செய்தி ஒலிபரப்பியது.

அமெரிக்க, வட வியட்னும் பிரதிநிதிகளின் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தமது நாடுகளில் நடத்துவதற்கு அனுமதியளிக்க பிரான்சும், செக்கோஸ்லாவாக்கியாவும் முன்வந்துள்ளன.

அமெரிக்க, வட வியட்னும் பிரதிநிதிகளுக்கிடையேயான பேச்சுவார்த்தைகளையிட்டுப் பூர்வாங்க ஆலோசனைகள் மாஸ்கோவில் நடைபெற்ருலும் இறுதிப் பேச்சுவார்த்தைகள் வேறொரு நாட்டிலேயே நடைபெறுவதுதான் நல்லதென ரஷ்ய வட்டாரங்களும் கருதுவதாகக் கூறப்படுகிறது.

### குண்டு வீச்சு பற்றி புகார்

இது இப்படியிருக்க, ஹனேய்க்கு வட மேற்குப் பகுதியில் 28-வது சமகோட்டுக்கு 240 மைல் வடக்கே, அமெரிக்க விமானங்கள், கடந்த 3 நாட்களில் 50 குண்டு வீச்சுத்தாக்குதல்களில் ஈடுபட்டதாக வட வியட்னும் புகார்செய்துள்ளது. இப்புகார் பற்றி உடனடியாக விசாரணை நடத்துமாறு அமெரிக்கப் பாதுகாப்பு இலாகா உத்தரவிட்டுள்ளது. இக்குண்டு வீச்சுக்கள் பற்றித் தமக்கு இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லையென அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்துள்ளது.

## ஈரானில் கொஸிஜின்

டெஹ்ரான், ஏப்ரல் 5

ஈரானுக்கு விஜயம்செய்துள்ள ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின், தலைநகரான டெஹ்ரானில் ஈரான் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகிறுர்.



## ஜப்பானுக்கு டிட்டோ

பெல்கிரேட், ஏப். 5

யூகோஸ்லாவிய ஜனதிபதி மார்ஷல் டிட்டோ உத்தியோகபூர்வமான விஜயமொன்றில் இன்று பெல்கிரேடிலிருந்து ஜப்பான் புறப்பட்டார்.

ஜப்பான் விஜயத்துக்குப் பின்னர் டிட்டோ மொங்கோலியாவுக்குச் செல்வார்.

## புதிய செக். பிரதமர் திரு. ஸெரனிக்

பிராக், ஏப்ரல் 5

செக்கோஸ்லாவாக்கிய ராஜாங்க திட்ட மந்திரியும் உதவிப் பிரதமர்களில் ஒருவருமான திரு. ஸெரனிக் செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

செக்கோஸ்லாவாக்கியா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி இந்த முடிவை நேற்று வெளியிட்டது.

திரு. ஸெரனிக் விரைவில் தமது புதிய மந்திரிசபையை அறிவிக்கவிருக்கிறுர்.

## உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

ஆனைக்கோட்டை புளியங்கன்று சித்திவிநாயகர் கோவில் வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகி [illegible]

## பிலிப்பைன்ஸ் ஜனதிபதி மார்க்கோசுடன் தேசாய் பேச்சு

மணிலா, ஏப்ரல் 5

இந்திய துணைப்பிரதமர் திரு. தேசாய், பிலிப்பைன்ஸ் ஜனதிபதி திரு. மார்கோசைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

திரு. தேசாய், மணிலாவில் நடைபெறும் ஆசிய அபிவிருத்தி வங்கி மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறுர்.

வியட்னும் சம்பந்தமாக அண்மையில் அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சன் எடுத்துள்ள நடவடிக்கையை இரு தலைவர்களும் பாராட்டியுள்ளனர்.

ஆசியாவில் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பிற்கு இரு நாடுகளும் தம்மாலான உதவியை அளிப்பதென இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத விற்பனை

புதுடில்லி, ஏப்ரல் 5

பாகிஸ்தானுக்கு டாங்கிகள் மற்றும் இராணுவத் தளபாடங்களை அமெரிக்கா விற்பனை செய்வதனுல் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான இராணுவச்சமநிலை பாதிக்கப் படுமென்று இந்திய ராஜாங்க பாதுகாப்பு மந்திரி திரு. பகத் நேற்று லோகசபையில் பேசுகையில் கூறினுர்.

இந்தியா, பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்த எடுத்துக்கொள்ளும் முயற்சிகளும், இந்த ஆயுத விற்பனையால் பாதிக்கப்படுமென்று திரு. பகத் மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் இந்த ஆயுத விற்பனை, டாஷ்கெண்ட் ஒப்பந்த உணர்வுக்கு முரணுனது. என்ருர் திரு. பகத்.

ஆனுலும் பாகிஸ்தானுடன் சிநேகபூர்வமான உறவுகளை வளர்க்க இந்தியா எப்போதும் தயாராக இருப்பதாகத் திரு. பகத் தெரிவித்தார்.

சீனுவுடனுன தொடர்புகள் பற்றி திரு. பகத் குறிப்பிடுகையில், தனது பிரதேசத்தில் ஓர் அங்குலத்தையும் விட்டுக்கொடுக்கும் அடிப்படையில் நட்புறவை எந்த நாட்டுடனும் இந்தியா வைத்துக்கொள்ள முடியாது என்ருர்.

## ஹரிஜன சிறுவன் கொலை

### இந்திரா கண்டனம்

புதுடில்லி, ஏப். 5

ஆந்திரப் பிரதேசத்தில் அண்மையில் ஒரு ஹரிஜனச் சிறுவன் தீ மூட்டிக்கொளுத்தப்பட்ட கொடுமைபற்றி இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று லோகசபையில் வெகுவாகக் கண்டித்தார்.

சபையின் மற்றும் பல அங்கத்தவர்கள் ஹரிஜன வகுப்பினருக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகள் பற்றி அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்தனர்.

உள்துறை மந்திரி திரு. சவான், ஹரிஜனச் சிறுவன் கொலை சம்பந்தமாக 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என்று சபையில் தெரிவித்தார்.

அத்துடன் ராஜ்ய முதல் மந்திரிகளுடன் அடுத்த முறை தாம் பேச்சுவார்த்தைகள் நடத்தும்போது, ஹரிஜன மக்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கும் விஷயத்துக்கு உயர் முக்கியத்துவம் கொடுக்கப் போவதாகவும் திரு. சவான் மேலும் கூறினுர்.

## அமெரிக்காவின் புதிய விண்கலம் பசிபிக்கில் விழுந்தது

வாஷிங்டன், ஏப். 5

கேப் கென்னடியிலிருந்து நேற்றுச் செலுத்தப்பட்ட அமெரிக்க விண்கலமான 'அப்பொலோ-3' பசிபிக் சமுத்திரத்தில் விழுந்துவிட்டது.

இத்தோல்வி காரணமாக 1970-ம் ஆண்டுக்கு முன் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் அமெரிக்க விண்வெளித்திட்டம் தாமதிக்கப்படலாமெனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகில் மற்றோர் யுத்தம் ஏற்படுமோ என்று பலர் பயப்படுகிறார்கள். அருணையுள்ள கடவுள் அவ்விதம் செய்யமாட்டார். ஆனால் நாம் நமது பேராசைகளால் யுத்தம் ஏற்படச் செய்கிறோம். சுயநலனை விட்டு, அன்பை, தெய்வத்தின் பெயரால் வளர்ப்பவர் உலக அமைதிக்கும் வழிசெய்பவராவர்.

— சுவாமி ராமதாஸ்.


ஈழநாடு

Eelana u National Tamil Daily
Telegrm. EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 24ம் திகதி [6-4-68]


## மனிதகுலத்துக்குப் பெருநஷ்டம்

அமெரிக்காவின் 'மகாத்மா காந்தி' என்று கூறப்படும் நீக்ரோத் தலைவரான வண. டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் சுட்டுக் கொலைசெய்யப்பட்டது, மனித குலத்துக்கும் சிறப்பாக அமெரிக்காவுக்கும் பெரும் நஷ்டமாகும்.

அகிம்சா மூர்த்தியான காந்தி அடிகள் எப்படி ஒரு வெறியனின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானாரோ, அதேபோல் அவரது அகிம்சா கொள்கையைப் பின்பற்றிவந்த டாக்டர்கிங்கின் முடிவும் ஏற்பட்டுள்ளது. இது ஒரு விதத்தில் எதிர்பார்க்கப்பட்டதுதான்.

அதிகமான நல்லவர்களுக்கு இவ்வுலகில் இடமில்லை என்றார் அறிஞர் பெர்னாட் ஷா, மகாத்மாவின் முடிவைக் கேட்டதும் தன்னைக் கொல்லவரும் வெறியனிடத்தும் அன்பு காட்டவேண்டுமென்று கூறிவந்த டாக்டர் கிங்கின் அகால மரணம், அவரை உலகப் பெரியார்களுள் ஒருவராக்கி, உயர்த் தியாகம் செய்துள்ள அவரை சரித்திர புருஷராகவும்செய்துவிட்டது. அவரது ஊனுடல் மறைந்தாலும் புகழுடல் என்றென்றும் நீடித்திருக்கும்.

முப்பத்தொன்பது வயதே ஆன இப் பெரியார், சமாதானத்துக்கான நோபல் பரிசை நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே பெற்று உலகப் புகழடைந்தார். நீக்ரோ மக்கள் தங்கள் உரிமைகளை பலாத்கார வழிகளிலின்றி, அகிம்சை முறையிலேயே பெறவேண்டுமென்று பிரசாரம்செய்து, அமெரிக்க உள்நாட்டு அமைதிக்குப் பெரிய காவலனாக இருந்தார். அவரது மரணம், ஏற்கனவே வியட்நாம் விஷயமாக மனச்சோர்வு அடைந்துள்ள ஜனாதிபதி ஜோன்சனுக்குப் பெரியதோர் நஷ்டமும் சோதனையுமாகும்.

மகாத்மாவைக் கொன்றவன் ஓர் இந்து வெறியன் முஸ்லீமாக இருந்திருந்தால் இந்தியாவிலே என்னென்ன இரத்தக் களறிகள் ஏற்பட்டிருக்குமோ! நினைக்கவே மனம் கூசுகின்றது. ஆனால் டாக்டர் கிங்கைக் கொன்றவன்ஒரு வெள்ளை நிறவெறியன் என்று கூறப்படுகின்றது. இதனால், இனி, அமெரிக்காவிலே என்னென்ன விபரீத விளைவுகள் ஏற்படுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

பலாத்காரத்தால் எந்தப் பிரச்னையும் தீரமுடியாதென்றும், அன்பும் அகிம்சையும்தான், நீக்ரோவரின் சங்கடங்களைத் தீர்க்க வழியென்றும் கூறிவந்த ஒரு தலைவர் கொலப்பட்டுவிட்டதைக் கண்டு, அம்மக்கள் ஆத்திரமடைந்து, அகிம்சையில் நம்பிக்கையிழந்து பழக்குப்பழி வாங்க முற்பட்டால் அதைவிடப் பெரிய துரதிருஷ்டம் வேறு இருக்கமுடியாது. அவ்வித நிலைமையைக் கண்டு, காலஞ்சென்ற பெரியாரின் ஆன்மா பெரும் ஏமாற்றமும் துக்கமுமடையும். அவர் தோன்றாத் துணையாக நின்று, தமது நீக்ரோமக்கள் தமது அகிம்சாகொள்கைக்குமாறாக நடக்காமல் காப்பார் என்றே நம்புவோம்.

அமெரிக்க வெள்ளையர்களுக்குப் பெரும் பாதுகாப்பாக இருந்து வந்த ஒரு நீக்ரோ தலைவரின் இந்த உயிர்த்தியாகம் வீண்போக முடியாது. நிறவெறி பிடித்த வெள்ளையர்களின் கல்மனதைக் கரைத்து, அவர்களிடை மனம் மாற்றமேற்படவும் இது உதவவேண்டும். ஏற்கெனவே அமெரிக்க அரசாங்கம், நிறவேற்றுமை அநீதிகளை நீக்கச் சட்ட திட்டங்கள் செய்துவருவதுடன் நீக்ரோ மக்களின் நிலைமையும் படிப்படியாக உயர்ந்து வருவதாகத் தெரிகிறது.

நிறவெறியை எதிர்த்து ஜனாதிபதிகள் ஆப்பிரகாம் லிங்கன் முதல் கென்னடிவரை இதற்காக உயிர் தியாகமும் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. வெறிச்செயல்கள் என்றும் வெற்றி பெற்றதில்லை. அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் தமது ஹோனலுலு பிரயாணத்தையும் ஒத்திவைத்துமார்ட்டன் லூதர் கிங்குக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார். இனி நிறவெறியை அறவே ஒழிக்க அங்கும் அவரது சகாக்களும் தீவிர நடவடிக்கைகள் எடுப்பதுடன் அமெரிக்கப் பொதுமக்களின் பூரண ஆதரவும் அவர்களுக்கு இவ்விடயத்தில் கிடைத்து நீக்கிரோ மக்கள் விமோசனம் பெறும் நாள் நெருங்குமென்று நம்புவோம். அதற்கூடவே வாழ்ந்து தமது உயிரையும் தியாகம் செய்துள்ள பெரியார் மார்ட்டின் லூதர் கிங்கின் ஆத்மாவும் அப்போதுதான் சாந்தியுடைய முடியும்.

# 'சிரமதானமூலம் 10 வருடங்களில் 85 கோடி ரூபாய் மிச்சம்'

அளவெட்டி, வெள்ளி

''மக்களின் தேவைகளை மாகாண ரீதியில் செய்வதே சனசமூக நிலையங்களின் கடமை. நாட்டின் முன்னேற்றம் மக்கள் கையில் தான் தங்கியுள்ளது. ஆகவே சீரழிந்து கிடக்கும் சனசமூகநிலையங்களை சிறப்புடன் திகழச் செய்யவேண்டும் என்ற நோக்கம் ஒவ்வொரு கிராம மக்களிடமும் தோன்றவேண்டும். மக்களின் வளர்ச்சிக்கு தேவையான புதுப்புது விடயங்களை சனசமூகநிலையங்கள் மேற்கொண்டு மக்களின் புது இயக்கமாகத் திகழவேண்டும்''.

இவ்வாறு வடமாகாண கிராம அபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. எஸ். பாலசுந்தரம் வலி-வடக்கு சனசமூக நிலைய சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலைமண்டபத்தில்வலி-வடக்குக் காரியாதிகாரி திரு.பி. எல். பற்றிக்ஸ் தலைமையில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வலி - வடக்குப் பகுதியில் உள்ள எழுபத்திநாலு சனசமூகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

திரு. பாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், ''அகில இலங்கையிலே முதல்முதலாக சிரமதான இயக்கம் வலி - வடக்கில் தான் ஆரம்பிக்கப்பட்டது. இச்சிரமதான இயக்கம் மக்களுக்கு ஐக்கியமனப்பான்மையை ஏற்படுத்துவதோடு கிராமமும் முன்னேற்றமடையவும் ஏதுவாகிறது. சென்ற பத்து வருடங்களாக கிராமங்களில் நடைபெற்ற சிரமதான வேலைகளால் இலங்கைக்கு 85 கோடி ரூபாய் மிச்சம் கிடைத்துள்ளது என்றார்.

வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் பேசுகையில், ''சனசமூகநிலையங்களின் வளர்ச்சிக்கு சமாசம் அதிமுக்கியம்'' என்றார்.

வலி - வடக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. சா. ந. வடிவேலு பேசுகையில், ''ஸ்தலஸ்தாபனப் பகுதியினரிடம் இருந்து எமது பகுதிக்கு மாற்றப்பட்டபோது அவர்களின் பட்டியலில் காணப்பட்ட சங்கங்களில் எத்தனையோ இயங்காத நிலையில் இருந்தன. அவற்றைப் பரிசிலனை செய்து இப்பகுதியில் 74 சங்கங்களைப் பதிவு செய்து அவற்றுக்கு 6440 ரூபாய் நிதியும் வழங்கியுள்ளோம்'' என்றார்.

இதையடுத்து நடைபெற்ற சமாச நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எ. சரவணமுத்து[ஜே. பி.], உபதலைவர்கள்: திரு. பாலசுப்பிரமணிய ஐயர், பண்டிதர் க. நாகலிங்கம், காரியதரிசி: திரு ஏ. கி. பொன்னுத்துரை, உபகாரியதரிசி: திரு. மு. செல்வராசா, தனாதிகாரி: திரு. எஸ். சின்னத்தம்பி. 15 கிராமசேவையாளர் பகுதியைச்சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## இன்றைய பலன்

பங்குனி மீ 24 உ.
[6-4-68]

சனிக்கிழமை

திதி- அட்டமி மாலை 5-47 மேல் நவமி.

நட்சத்திரம்- புநர்பூசம் இரவு 1-04 மேல் பூசம்.

ராகுகாலம்- 9-08—10-38.

சுபநேரம்- 3-08—4-38.

இன்று பிறந்தவர்களுக்கு— ஒளிமயமான ஆண்டு. உறவினர்கள் வருகையும், உபசாரங்களும் நிறைய இடம் பெறும். தொழில் புரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தூரதேசத்திலிருந்து நீங்கள் நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும்.

மேஷம்- பணத்துடன், பரிவும், பண்புடன் சேரும்.

ரிஷபம்- ஏமாற்றமிகுதி சோர்வு மனப்பான்மை.

மிதுனம்- குமுறும்நெஞ்சம், குறைகேட்கநேரிடும

கடகம்- இல்லற மகிழ்ச்சி, இனியவை நடக்கும்.

சிம்மம்- ஆசை வைக்காதே, அவதிப்படாதே.

கன்னி- தாய்வழிச் சுகம், தனத்துடன் வாழ்தல்.

துலாம்- பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.

விருச்சிகம்- பாதையில் தடை, பார்த்து நட.

தனுசு- இல்லறம் இனிக்கும், இணைப்பும் இறுகும்.

மகரம்- தாமத குணம், தயக்கத்தின் தாக்குதல்.

கும்பம்- நம்பிக்கை வெற்றி, நல்ல நாள்.

மீனம்- வாழ்த்தும் கிடைக்கும், வரவும் உயரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

# ஐயாறன் எழுதுவது

சென்னையிலே தமிழ்விழாவுக்குச் சென்றிருக்கையில் சில 'பரதநாட்டிய' நிகழ்ச்சிகளைக் காண நேரிட்டது. அதன்பயனாக இனி பரதநாட்டியமே பார்க்கக்கூடாதென்று தீர்மானித்தேன். காரணம் தெய்வீக உணர்ச்சிகளுக்குச் சற்றும் இடமின்றி, கீழ்த்தர உணர்ச்சிகளைக்கிளப்பி, மனிதனை மிருகமாக்கக் கூடியதாக அந்த நிகழ்ச்சிகள் அமைந்தமைதான்.

இன்றைய சமூகத்தின் பிரச்னைகளைத் தீர்க்க அக்கலை நிகழ்ச்சிகள் ஒருவித உதவியும் செய்வதாகஇல்லை. தெய்வீக நினைப்பு இருந்தாலாவது மனம் தூய்மை அடையலாம். ஆனால் தெய்வத்துக்கு அங்கு சிறிதும் இடமில்லை. பாரதக்கலைகளின் உண்மை நோக்கமே மனிதனை தெய்வீகமாக்குவதுதான். ஆனால் அதற்கு நேர்மாறாக, பிறநாட்டு நடனங்களைப்போல், மனிதனை மிருகமாக்க வழிகாட்டுவதாயின் இதைப்பற்றிஎன்ன சொல்ல!

ஃ ஃ ஃ

கொழும்பிலே இருவாரங்களுக்குமுன்பாக சில அன்பர்களின் தூண்டுதலால், செல்வி ஆனந்தவல்லி சச்சிதானந்தாவின் பரதநாட்டியத்தைப்பார்க்கும் வாய்ப்புக்கிடைத்தது.

அத்துடன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணநகரமண்டபத்தில் செல்வி உமையாள் ரத்னசிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றத்தையும் கண்டதும் சென்னையில் ஏற்பட்ட ஏமாற்றம் நீங்கியதுடன் இலங்கையைப்பற்றி பெருமையும் ஏற்பட்டது. 'நல்லவேளை 20மைல் கடல் இரண்டையும் பிரிக்கிறது' என்று என்பக்கத்திலிருந்த ஓர் அன்பர் [சென்னையில் அவரும்என்னுடனிருந்துஅக்கலை நிகழ்ச்சிகளைக் கண்டவர்] தெரிவித்ததை என்மனம் அப்படியே ஒப்புக்கொண்டது. இன்றேல் அந்தநாதிதிகக் காற்று, இங்கு மல்லவா வீசும்!

ஃ ஃ ஃ

பதினேரே வயதான ஆனந்தவல்லி இதற்குள் ஈழத்தில் மட்டுமன்றி சென்னையிலும் புகழ்பெற்றுவிட்டார். நாட்டியகலா கேசரி வழுவூரார் இச்சிறுமியின் திறமையைக்கண்டு, தமிழ் விழாவிலே இவரையும் சேர்த்து தனி நடனம் ஆடச் செய்தாராம். (இதைஅங்கு பார்க்க முடியவில்லை) கொழும்பு லயனல் வெண்ட் தியேட்டரில், மேடை அலங்காரமே தெய்வீகச் சூழ்நிலையாக பார்ப்போர் மனதை தூய்மைப்படுத்துவதாக இருந்ததுடன், எல்லா நடனங்களுமேதெய்வீகஉணர்ச்சியை வளர்ப்பதாக இருந்தன. ராகமாலிகையிலேதானத்தக்கு நடனமாடியது ஒரு புதுமையாவதுடன், பேராசிரியர் சாம்பமூர்த்திபோன்றவரின் பாராட்டுதலையும் ஆசியையும் பெற்றுத்தந்தது. இவருடன் இவரது கலையும் வளர்ந்து, உலக மேடைகளில் சிறக்கக்கூடிய எதிர்காலம் இத்தெய்வீகக் குழந்தைக்குக் காத்துள்ளதென்று கூறலாம்.

ஏரே ஒரு குறை பின்னணி சங்கீதம் பெண்கள் பரதம் ஆடும்போது பின்னணியும் மென்மையாகஅப்பெண்ணே ஆடிப்பாடுவதுபோல் இருப்பதே இயற்கையாக இருக்கும். பல குரல்களில் ஆண்கள் பாடுவது இனிமையாகவோ பொருத்தமாகவோ இல்லை.

ஃ ஃ ஃ

(4-ம் கலம் பார்க்க)

[5-ம் கலத்தொடர்ச்சி]

இந்தக்குறை யாழ்ப்பாணத்து செல்வி உமையாள் அரங்கேற்றத்தில் இல்லாதபடி, செல்வி திருக்குமாரசாமியின் நட்டுவாங்கமுரபின்னியும் செய்துவிட்டது. தலைமை வகித்த டாக்டர் மலலசேகரா, பரதநாட்டியக்கலைசிறப்புகளைப்புகழ்ந்ததுடன், செல்வி உமையாளின் திறமையைப்பாராட்டினார்.

வேம்படிக்கல்லூரியில் படிக்கும் செல்வி உமையாள் ஓர் 'ஆர்ரவுண்டராம்' எஸ். எஸ்.ஸியில், 4 'டிஸ்டிங்ஷனும்' '4 கிரிடிட்டும்' எடுத்துள்ள இவர், 'பாட்மின்டன்' விளையாட்டிலே இப்பகுதியின் 'சாம்பியனும்!' பரதநாட்டியத்திலும் அவர் அரங்கேற்றத்திலேயே, மண்டபத்தில் கூடியிருந்தபெருந்திரளான கலாரசிகர்களின் பாராட்டுதலையும் ஆசியையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவ்வித குழந்தைகளைப் பெற்றெடுத்த அப்பெற்றோர்கள் நல்லதவம் செய்திருக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

நானேல் உன்னடியே
நினைந்தேன் நினைத்தலுமே,
ஊனேர் இவ்வுடலம் புகுந்
தாய் என் ஒண்சுடரே,
தேனே இன்னமுதே திரு
மேற்றளி உறையும்
கோனே உன்னையல்லால்
குளிர்ந்தேத்த
மாட்டேன்னே.

— ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்

[எனது ஒளி பொருந்திய விளக்குப் போன்றவனே, தேன்போன்றவனே, இனிய அமுதம் போன்றவனே, கச்சத் திருமேற்றளி எனும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே உன் திருவடியை அடைய நினைத்தேன். அங்ஙனம் நினைத்ததும் நீ ஊன் பொருந்திய இவ்வுடலுள்ளே வந்து புகுந்துவிட்டாய்! ஆதலின் இத்தகைய பேரருளாளனாகிய உன்னை அல்லது யாரையும் அடியேன் உளம் குளிர்ந்து போற்றமுடியுமா?]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மதுவின் கையில் சிக்கி பெருநாட்கள் திண்டாடுகின்றன'

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் கூறுகிறார்

அளவெட்டி, வெள்ளி

புதுவருடம் போன்ற மற்றைய பெருநாட்களை மக்கள் கொண்டாடுவதற்கு மதுபோன்ற குடிவகைகளை பாவித்துக்கொண்டாடி அப்பெருநாட்கள் திண்டாட்டமாக மாறி எத்தனையோ தீய செயல்களை தோற்றுவிக்க ஏதுவாகிறது. இந்த நல்ல பெருநாட்களில்தேசிய கிராமிய விளையாட்டுக்களை கொண்டாடுவதால் நாட்டில் ஏற்படும் கொலை, சச்சரவு போன்ற தீய செயல்களைத் தவிர்ப்பது மாத்திரமன்றி நமது தேசிய கிராமிய விளையாட்டுக்கள் அபிவிருத்தியடைவதோடு மக்கள் மத்தியில் சமாதான விழிப்புணர்ச்சி ஏற்படவும் ஏதுவாகும்'.

இவ்வாறு காங்கேசன்துறை பொலிஸ்பகுதி தலைமைக் கரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி காங்கேசன்துறை பட்டின சபை மண்டபத்தில் நடைபெற்ற புத்தாண்டு விளையாட்டுவிழா ஆலோசனைக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் உரையாற்றுகையில் கூறினார்.

வலி வடக்கு விளையாட்டுக் கழகச் சமாசம் சார்பில் நடைபெற்ற இவ் வாலோசனைக் கூட்டத்தில் காங்கேசன்துறைப் பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த கிராம சேவையாளர்களும் சனசமூக நிலையப் பிரதிநிதிகளும் கிராமமுன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகளும், மற்றும் விளையாட்டுக்கழகப் பிரதிநிதிகளும், கலந்து கொண்டனர்.

இப் புதுவருட விளையாட்டுவிழாவை செயல்படுத்த பின்வருவோரைக் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் திரு. எஸ், வி. மூர்த்தி (காங்கேசனதுறைப் பொலிஸ் பகுதி தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர்) உப தலைவர்- திரு. வி, செல்லையா [காங்கேசன்துறை பொலிஸ்பகுதி குற்றத்தடுப்பு இன்ஸ்பெக்டர், பொதுக் காரியதரிசியும் போட்டி அமைப்பாளரும் திரு கே. கந்தசாமி. காரியதரிசி திரு. மு] செல்வராசா. தனாதிகாரி திரு. பி. மரியநாயகம்

ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

### கடன் தொல்லையால் தற்கொலை

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் - களுவலைச் சேர்ந்த முருகன் ஆறுமுகம் (40 வயது) நச்சுத்திராவகம் அருந்தித்தற்கொலை செய்துகொண்டார். மூன்று பிள்ளைகளுக்கு தந்தையான இவர் ஒரு தொழிலாளியாவார். வலிகாமம் மேற்கு மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா மரண விசாரணை நடாத்தினார். காலம் சென்றவரின் மனைவி ஆ. இலட்சுமி சாட்சியமளிக்கையில் தனது கணவன் கடன்தொல்லையினால் எப்போதும் கவலையுடனே இருந்து வந்தார் என்றும் கடந்த சில தினங்களாக தற்கொலை செய்யப் போகிறேன் என கூறிவந்தாரென்றும் கூறினார்.

ஆ. பசுபதியும் சாட்சியமளித்தார். பிரேத பரிசோதனை நடைபெற்றது. மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

### 'ஈழநாடு' கீலக வருட பஞ்சாங்கம்

13-4-68 'ஈழநாடு' கீலக வருடப்பிறப்புச் சிறப்பிதழாக வெளிவருகிறது. இந்துக்கள் ஒவ்வொருவரின் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய கீலக வருடப் பஞ்சாங்கம் 'ஈழநாடு' சிறப்பிதழில் முக்கிய அம்சமாகும். வாசக நேயர்கள் தங்கள் பிரதிகளுக்கு முன்கூட்டியே 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை யாளர்களிடம் ஒழுங்குசெய்துகொள்ளவும் அதிக பிரதிவேண்டும் பத்திரிகை விற்பனையாளர்கள் விநியோக மனேஜருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

## தமிழிலில்லாததால்

# அழைப்பைத் திருப்பி அனுப்பினார் கோப்பாய் எம்.பி.

நல்லூர், வெள்ளி

அழைப்பு தமிழில் இல்லாததால் அதனைத் திருப்பி அனுப்பிவைத்தார் கோப்பாய் எம். பி. பொல்லநறுவையில் இன்று திறக்கப்படும் கட்டிப்பால் தொழிற்சாலை திறப்புவிழாவுக்கு கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளைக்கு அனுப்பப்பட்டிருந்த அழைப்பில் தமிழ் இடம்பெறாததால் இலங்கை பால்சபை காரியதரிசிக்கு அழைப்பைத் திருப்பி அனுப்பி வைத்துள்ளார். அழைப்பில் ஆங்கிலம், சிங்களம் ஆகியவைமட்டும் இருந்ததாக எம். பி. தெரிவித்தார்.

"நரி கொக்குக்கு தட்டில் விருந்து வைத்ததையும், கொக்கு நரிக்கு கூஜாவில் விருந்து வைத்ததையும் ஒத்திருக்கிறது உங்கள் அழைப்பும்" என்று எம்.பி. திருப்பி அனுப்பிவைத்த அழைப்புடன் இணைத்துள்ள குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

"தேசிய ஒற்றுமையைப் புறக்கணிப்பதாகவும் இருக்கிறது இம்மாதிரியான நடவடிக்கைகள்" என்றும் எம்.பி கண்டித்துள்ளார்.

# கல்வி அமைச்சரின்போக்குக்கு அமிர்தலிங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், சனி

"அரசாங்கத்தில் தாமாகவே விரும்பிச் சேராமல் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர்களல்லாத சக ஊழியர்களை அரசாங்கம் தானாகவே அரசாங்க ஊழியர்களாக்கிக் கொண்டு, அவர்களுக்கு சில கள நிபந்தனை அளிப்பதும் அதன் காரணமாக சம்பள உயர்வு அளிக்காமல் இருப்பதும் நியாயமற்றதும் அநீதியான செயலுமாகும். இப்பிரச்னைக்குத் தர்க்க ரீதியாகவோ சட்ட ரீதியாகவோ நடவடிக்கை எடுக்க முடியும்."

அகில இலங்கை கவிகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர் அல்லாத ஊழியர் சங்கத்தின் 3 வது வருடாந்தக் கூட்டத்தில்கலந்துகொண்ட வட்டுக்கோட்டை எம். பி. யும் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் மேற் கண்டவாறு கூறினார். வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற இக்கூட்டம் திரு. கே. நடராசா தலைமையில் நடைபெற்றது

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்றைய அரசாங்கத்தில் கல்வி அமைச்சரோ அவரது இலாகாவோ சரி அவர்களின் நிர்வாகத்தின் ஒபாக்கும் நடவடிக்கைகளும் வரவேற்கத் தகுந்தவைகளாக காணப்படவில்லை. தமிழர் சம்பந்தப்பட்ட விஷயங்களிலோ சரி சிங்கள மக்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களிலோ சரி எப்பிரச்னைகளும் இன்றைய கல்வி அமைச்சுடன், தீர்த்துக்கொள்ளமுடியாமல் இருக்கிறது. நாம் அரசாங்கத்தில் இருக்கிறோம் என்ற முறையில் பிரதமரிடம் சென்று முறையிட்டுத்தான் பல பிரச்னைகளைத் தீர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

கல்வி அமைச்சைப் பொறுத்த வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்கும் இன்றைய கல்வி அமைச்சின் நிர்வாகத்துக்கும் வித்தியாசம் இல்லை.

மற்றும் திரு. ஜெயரட்னம், திரு. பி. நடராசிங்கம், திரு. கே. மாணிக்கவாசகர், திரு. ஏ. சண்முகம், திரு. ஏ. குலசேகரம், ஆகியோரும் பேசினர்.

(வி. நி)

# 'துப்பாக்கி வேட்டு கேட்டது; யாரென்று தெரியாது'

## இறந்தவர் அளித்த வாக்குமூலம்

யாழ்ப்பாணம், சனி

கொடிகாமத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் மரணமான யோகர் சின்னத்தம்பி [35 வயது] யின் மரணம் சம்பந்தமாக ஆஸ்பத்திரியில் மாஜிஸ்திரேட் திரு. ஜமீல் மரணவிசாரணை நடத்தினார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் காலமானவரிடம் இறப்பதற்கு முன்னர் பதிவு செய்த வாக்குமூலத்தை மாஜிஸ்திரேட்டிடம் சமர்ப்பித்தார்.

வீட்டில் படுத்திருந்த போது துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டதாகவும், பின்னர்தான் குண்டுக்கு இலக்கானதாகவும். யார் சுட்டாரென்பது தெரியாதென்றும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசார் சந்தேக நபர்களைத் தேடுகின்றனர்.

(க

### பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

இன்று நடைபெறவிருந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா அக்கல்லூரி ஆசிரியர் ஒருவரின் அகாலமரணம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### பால் கிடைக்கும்

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற் பண்ணைச்சங்க வழக்கம் பரை கிளையினர் பொது மக்களுக்கு பால் சில்லறைக்கு விற்பனைசெய்ய முன்வந்துள்ளனர். இதுவரை காலமும் அரசாங்கத்துக்கு மட்டுமே பாலைக் கொடுத்துவந்தனர். இதனால் பொது மக்கள் தமக்கு வேண்டிய பாலைப்பெற்றுக் கொள்ளமுடியாமல் கஷ்டமடைந்தனர். இம்மாதம் தொடக்கம், பொதுமக்கள் யாவரும் தமக்கு வேண்டிய பாலைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# ஒலிப்பதிவுக் கருவியுடன் சிறுவன் கைது

அளவெட்டி, வெள்ளி

பட்டப்பகலில் புதிய ஒலிப்பதிவுக் கருவியுடன் கைதானார் 15 வயது சிறுவன். காங்கேசன்துறையைச் சேர்ந்த தம்பிமுத்து தவம் என்னும் சிறுவன் புதிய ஒலிப்பதிவு கருவி ஒன்றை [ரேப்றைக்கோட்] கடத்திச் செல்வதாகச் சந்தேகித்து காங்கேசன்துறை வீதியில் வைத்து காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. வி. வி. செல்லையா கைதுசெய்து ரிமாண்டில் வைத்துள்ளார்

விசாரணையின் போது விஜயரத்தினம் என்பவர் தன்னிடம் இவ் ஒலிப்பதிவு கருவியைத் தந்ததாகச் சிறுவன் கூறினார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த குட்டியன் திருச்செல்வம் என்பவர் குறிப்பிட்ட ஒலிப்பதிவுக்கருவி தன்னுடையதென பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இம்மூவரையும் பொலிசார் கைதுசெய்து ரிமாண்டில் வைததுள்ளனர். இது சம்பந்தமாக பொலிசாரின் விசாரணை தொடர்கிறது.

### 'ஆப்பிளைவிட மாம்பழம்நல்லது

நல்லூர், வெள்ளி

"ஆப்பிள் கிடைக்கவில்லை, திராட்சை கிடைக்கவில்லையென இங்குள்ளவர்கள் குறைப்பட்டுக்கொள்கிறார்கள், ஆனால் நான்நியூசிலந்தில் இருந்தபோது இலங்கையின் மாம்பழத்தையும் வாழைப்பழத்தையும் அங்குள்ள உயர் அதிகாரிகள் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்ட காட்சியைக் கண்டுநான் மகிழ்ந்திருக்கிறேன்."

இவ்வாறு டாக்டர் ஜி.பீ. மலலசேகரா நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் நகைச்சுவையுடன் கூறினார்.

### மாமனைத் தாக்கிறாம் மருமகன்

அளவெட்டி, வெள்ளி

மாமனுக்கு சவாளால் அடித்துக் காயப்படுத்தினாராம் மருமகன். மாமனார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பாலாவியைச் சேர்ந்தசுழியர் இராசேந்திரம் என்பவருடைய வீட்டுக்குச் சென்ற மருமகனான மதியாஸ் அல்பிரெட் என்பவர் தனது மனைவி தன்னுடன் வர மறுத்ததற்காக அவருக்கு அடித்தாராம் இதைக்[illegible] மாமனார் சுழியர் இரா[illegible]திரம் ஏன் எனது மகளுக்கு அடிக்கிறாய் என்று கேட்டாராம் நீயார் கேட்பதுஎன்று சொல்லி சவலால் அடித்தாராம் அல்பிரட்.

மண்டையில் படுகாயங்களுக்குள்ளான மாமனார் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்[illegible] [illegible] அல்பிரட்டை தேடுகின்றனர்.

# 'கடின' மாவட்டங்களுக்கு ஆங்கில மாணவ ஆசிரியர்

## கல்வி அமைச்சு நியமிக்கும்

மஹர, வெள்ளி

மாணவ ஆசிரிய பரீட்சையில், ஆங்கில உதவி மாணவ ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்துப் பரீட்சைகளில் தேறியவர்களில் 85 சத வீதத்தினரைக் கல்வி அமைச்சு கடினமான பிரதேசங்கள் எனக் கணித்துள்ள இடங்களுக்கு அனுப்பத்தீர்மானித்துள்ளதெனத் தெரிகிறது.

இத்திட்டத்தின் கீழ். ஆங்கிலம் போதிக்கவென 2000 மாணவ ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்புதிய ஆசிரியர்கள், அனுராதபுரம், பொலன்னறுவை, திருக்கோணமலை. மொனருகல, பதுளை, நுவரெலியா, அம்பாறை, அம்பாந்தோட்டை, சிலாபம், குருணாகலை, கேகாலை, ரத்தினபுரி, மாத்தறை, மாத்தளை ஆகிய 14 கடின மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவரெனத் தெரியவருகிறது. கடைசியாகக் குறிக்கப்பட்டுள்ள 5 மாவட்டங்கள், பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன்வாம்.

மாவட்ட சேவை அடிப்படையிலேயே ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களென்றும், வேறு இடங்களுக்கு அவர்கள் மாற்றப்பட மாட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

### தளபதியாக பதவி உயர்வு

அளவெட்டி, வெள்ளி

15 வருடங்களாக பலாலி விமானநிலைய உதவித் தளபதியாகக் கடமையாற்றிய திரு. என். கனகசபை விமானத் தளபதியாகப் பதவி உயர்வு பெற்று கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொதுச்சேவைக் கமிஷனரால் பதவி உயர்வு பெற்ற இவர் சென்ற ஆண்டு சர்வதேசநிதி பெற்று பெய்ரூட்டில் சர்வதேச விமானநிலைய நிர்வாகப்பயிற்சி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது இடத்துக்கு தற்பொழுது பலாலி விமான நிலையத்தில் கட்டுப்பாட்டு அதிகாரியாக கடமையாற்றும் திரு. என். நடராசா பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் 300 வாலிபர் விவசாயப் படையில் சேர்ந்தனர்

உடுப்பிட்டி, வெள்ளி

சென்ற வியாழக்கிழமை காலை 9-30 மணியளவில் வடமராட்சிப் பகுதியின் பல இடங்களில் இருந்தும் விவசாயப்படையில் சேர்வதற்கு விண்ணப்பித்திருந்த இளைஞர்கள் பருத்தித்துறையிலிருக்கும் வடமராட்சிக் காரியாதிகாரி கந்தோரில் தெரிவு செய்யப்பட்டனர். உடுப்பிட்டித் தொகுதியையும், பருத்தித்துறைத் தொகுதியையும் சேர்ந்த சுமார் 300 வாலிபர்கள் விவசாயப்படை வீரர்களாக நியமனம் செய்யப்பட்டனர். இவர்களை விவசாயப்படை முகாமுக்கு ஏற்றிச் செல்வதற்கென விவசாயப்படை முகாமைச் சேர்ந்த இரு ஜீப் வண்டிகளும், டிரக்குகளும் வந்திருந்தன.

இவ்வைபவத்தில் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி யுமான திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி திரு. க. துரைரத்தினம், வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் ஆகியோரும், விவசாயப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர். புதிதாக விவசாயப்படையில் சேர விரும்பியவர்கள் பருத்தித்துறை, உடுப்பிட்டி எம். பி.க்களின் சிபார்சின் பேரில் தெரிவு செய்யப்பட்டனர்.

## லொறி மரத்துடன் மோதியது: இளைஞர் துடிதுடித்துமாண்டார்

வவனியா, வெள்ளி

மரக்கறி வியாபாரம் செய்யும் இருபத்திரண்டு வயது இளைஞர் ஒருவர் துடிதுடித்து மாண்டார். சுன்னாகத்திலிருந்து கண்டிக்கு லொறியில் சென்றுகொண்டிருந்தபோது மாங்குளத்தில் 140-வது கட்டையடியில் லொறி பெரிய மரமொன்றுடன் மோதியதைத் தொடர்ந்து இவ் இளைஞர் ஸ்தலத்திலேயே பலியானார்.

கண்டியிலிருந்து சுன்னாகத்துக்கு மரக்கறி கொண்டு வந்து விற்றுவிட்டு அவ்விடத்தில் உள்ள மரக்கறிகளை வாங்கிக்கொண்டு கண்டிக்கு இவ் இளைஞர் போவது வழக்கமென விசாரணையில் தெரியவந்தது.

நேற்று பகல் 12 மணியளவில் கண்டியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி பாதையை விட்டு விலதி வீதிக்கருகாமையில் உள்ள மரமொன்றுடன் மோதியதாம்.

ஆர். எ. விஜயரத்தினம் [வயது 22] என்பவரே மரணமான இளைஞராவார்.

உதவி மேலதிக வவனியா நீதிபதி திரு. பி. வி. சேனாதிராசா ஸ்தலத்தில் மரண விசாரணை நடத்தினார்.

லொறிச் சாரதி, கிளீனர் ஆகியோர் சாட்சியமளித்தனர். சாரதி தனது சாட்சியத்தில் கூறியதாவது:

நாம் கண்டியிலிருந்து மரக்கறி ஏற்றி வந்து சுன்னாகச் சந்தையில் விற்றுவிட்டு, அவ்விடத்தில் உள்ள மரக்கறியை வாங்கிக்கொண்டு கண்டியை நோக்கிக்கொண்டுப்போகும் போது இறந்தவரான முதலாளி முன் சீற்றில் இருந்தார். அவருக்கருகாமையில் கிளீனர் இருந்தார். லொறியின் ஸ்ரியறிங்கை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்பொழுது லொறி மரத்துடன் மோதியது.

மேல் விசாரணையை ஒத்திவைத்த நீதிபதி லொறிச் சாரதியை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து 16-ந்திகதி வவனியாகோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## கடைக்குள் நுழைந்து பயமுறுத்தினராம்

அளவெட்டி, வெள்ளி

''வேட்டியும் சட்டையும் தா? அல்லது வெட்டுவேன்'' என ஒரு சலவைத் தொழிலாளியின் கடைக்குள் கத்தியுடன் சென்று கலாட்டா செய்தாராம் ஒருவர்.

ஞானப்பிரகாசம் குரிசமுத்து என்பவர் தனது லோன்றிக்குள் அத்து மீறி இரவு நேரத்தில் வந்து தன்னை வேலை செய்ய விடாது தடுத்து தமது கடையிலுள்ள வேட்டிகள், சட்டைகளில் ஒன்றைத் தரும்படியும், தரமறுத்தால் கத்தியால் வெட்டி உயிருக்கு ஆபத்து விளைவிப்பேன் எனப் பயமுறுத்தினர் என்று வயாவிளான் திற்கம்பரை உலகேசு கைத்தான் என்பவர் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

இது சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்

---

இவர்களும்

## சிங்களம் படிக்க வேண்டும்

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

பாடசாலையில் கடமை யாற்றும் ஆசிரியரல்லாத ஊழியரும் சிங்களத்தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்றும் இதுவரை தேர்ச்சி பெறாதவர்கள் விரைவில் தேர்ச்சிபெற வேண்டுமென்றும் தெரிகிறது.

இவ்வித ஊழியர் பற்றிய விவரங்களை வடபகுதிக் கல்விப் பகுதியினர் திரட்டிவருகின்றனர்.

## சுன்னாகத்தில் எண்ணெய் ஊற்று

உடுவில், வெள்ளி

சுன்னாகத்திலுள்ள கிணறு ஒன்றில் எண்ணெய் திராவகம் ஊறுகிறதாம். சுன்னாகத்தைச் சேர்ந்த புரொக்டர் கனகரத்தினம் என்பவருக்கு சொந்தமான காணியில் உள்ள கிணறு ஒன்றிலேயே இவ்வாறு ஊறுகிறதாம்.

கிணற்றுநீரை இருமுறை இறைத்ததாகவும். அப்பொழுது பெற்றோல் மணம் வீசியதாகவும். நீரை எடுத்து எரித்துப்பார்த்தபோது அது பற்றிஎரிந்ததாகவும் வீட்டுக்காரர் கூறினர்.

## கறுப்புச்சந்தையில் சீமெந்து விலை ரூ. 20

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் சீமெந்திற்கு ஏற்பட்டிருக்கும் பெரும் தட்டுப்பாடடினால் ஒரு பாக்கட் சீமெந்தின் விலை கறுப்புச்சந்தையில் சுமார் 20 ரூபாவரை உயர்ந்துள்ளது. கடந்த 4 நாட்களில் இங்கு சீமெந்துக்கு ஏற்பட்டிருக்கும் இத்தட்டுப்பாட்டுக்கு காங்கேசன் துறை சீமெந்து உற்பத்தி செய்யும் இயந்திரம் ஒன்று பழுதடைந்ததே காரணமாகும்.

உடைந்த இயந்திரம் ஒன்றைத்தவிர மற்றொரு இயந்திரம் மூலமே தற்போது காங்கேசன்துறையில் சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதனால் இங்கு ஏற்பட்டிருக்கும் சீமெந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய வெளிநாட்டிலிருந்து இங்கு இறக்குமதி செய்யும் சீமெந்து கொண்டு வரவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சீமெந்து தற்போது கொழும்பு சி. டபிள்யூ. ஈ ஸ்தாபனத்திலேயே விற்பனை செய்யப்படுகின்றது.

காலியில் உற்பத்திசெய்யப் படும் சீமெந்து அங்கு மட்டும் தேவைக்குப் போதுமானதாக இருக்கின்றதாம். காங்கேசன்துறையில் உடைந்த இயந்திரம் இன்னும் இருவாரத்தில திருத்தப்படும். சீமேந்துத்தட்டுப்பாடு இருவாரத்தில் இங்கு நீங்கலாமென சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். (கா. நி)

அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர் வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
(புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## புதிய அந்தோனியார் ஆலயம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

நெடுந்தீவில் இருந்துஏறக்குறைய பதினெட்டு மைல் கிழக்கேயுள்ள மக்களின் நடமாட்டமில்லாத, குடிநீர் அற்ற ஏகாந்தமான தீவான [illegible] பகுதியில் புதிதாகப் புனித அந்தோனியார் ஆலயம் ஒன்று உதய மாகியுள்ளது.

கணக்காளர் பரீட்சை

## டாக்டர் மலலசேகராவிடம் அதிருப்தி தெரிவித்தனர்

யாழ்ப்பாணம், சனி

1967-ம் ஆண்டு ஆகஸட் மாதம் பரீட்சைப்பகுதியினரால் முதன்முதலாக நடாத்தப்பட்ட கணக்காளர்களுக்காகிய (ஆங்கில) பரீட்சையின் பெறு பேறுகள் குறித்து தேசிய உயர் கல்விச் சபைத்தலைவர் டாக்டர் ஜி பி. மலலசேராவிடம் அதிருப்தி தெரிவித்தனர்.

இது சம்பந்தமான மகஜர் ஒன்றை டாக்டர் ஜி பி மலலசேகராவிடம் இப்பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் கையளித்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த டாக்டர் ஜி, பி. மலலசேகராவை நேற்று முன் தினம் நண்பகல் இம்மாணவர்கள் 'கிங்ஹவுஸில்' சந்தித்தனர். யாழ். கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய 75 மாணவர்கள் சார்பில் திருவாளர்கள் ம. தகராஜும், பி. கருணாகரனும் டாக்டர் மலலசேகரவைச் சந்தித்து இம்மகஜரை அளித்தார்கள்.

குறிப்பிட்ட இப்பரீட்சையில் முன்னறிவித்தல் எதுவுமின்றி சிலகுறிப்பிட்ட மாற்றங்கள் செய்யப்பட்டதும் தமிழ் சிங்கள மொழி வினாத்தாள்களிலும் பார்க்க ஆங்கில வினாத்தாள் புரியாததாகவும் கடினமானதாகவும் இருந்ததென்று இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆங்கில வினாத்தாளை புனராலோசனை செய்துநூனசித்திமுறையை அமுல் செய்ய வேண்டுமென்றும்ஆங்கிலம்மூலம் கல்வி பயிலும் மாணவர்க்கு ஒரு சங்கம் தனியாக நிறுவ வேண்டுமென்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியிலிந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய 75 பேரில் 3பேர் மட்டும் சித்தியடைந்துள்ளவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கா. நி]

## ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மீது நடவடிக்கை

### துவக்கு லைசென்ஸ் பெறவில்லையாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1968-ம் ஆண்டுக்கான துவக்கு லைசென்ஸை இன்னும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பெறவில்லையாம். இவர்கள் மீது நடவடிக்கைகளை உள் நாட்டமைச்சு விரைவில் மேற்கொள்ளும் எனத் தெரிகின்றது.

1968-ம்ஆண்டுக்கான துவக்கு லைசென்ஸை கடந்த வருடம் டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் பெற வேண்டிய போதிலும் 3மாதகாலத் தவணைமேலும் துவக்குச் சொந்தக் காரர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாம், குறிப்பிட்ட தாமதக் கட்டணத்துடன் லைசென்ஸ் பெறவேண்டிய 3மாதத் தவணையும் கடந்த மார்ச் மாதம் 31-ம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது.

காரியாதிகாரி கந்தோரில் லைசென்ஸ் எடுத்தவர்கள் தவிர, இன்னும் சுமார்1000 பேர் புதுவருட லைசென்ஸ் பெறவில்லையென உயர்தர அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்

இது பற்றிய முழு விபரங்களும் உள் நாட்டமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (கா. நி)

## "நிர்வாகம் பொதுவாக வேண்டும்"

சுழிபுரம், வெள்ளி

"கோவில் நிர்வாகம் பொதுவாகவும், ஊர்மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு தமக்கேற்ற ஒரு தர்மகர்த்தா சபை மூலம் நடாத்த முன்வருவது வரவேற்கத்தக்கதாகும். இன்று சமயத்தின் பேரைக் கூறி எமது ஆலயங்களில் நடைபெறும் பெரும் அருவருக்கத்தக்க செயல்களை ஒழிப்பதற்கு கோவில் பரிபாலனம் பொதுவாக்கப்பட வேண்டும்" என்று தொல்புரம் மூட்டடி கோவில் தர்மகர்த்தாக்கள் சபைத் தெரிவுக் கூட்டத்துக்கு அரசாங்க அதிபரின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு தலைமை வகித்துப் பேசிய தொல்புரம் கிராம சேவையாளர் திரு. மு. தர்மதாசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## தேவார வகுப்பு

யாழ்ப்பாணம், சனி

இந்துசமய ஆலோசனைச் சபை ஆதரவில் திரு. பீ. ஓ. எஸ். ராஜசேகரன் பின்வரும் இடங்களில் தேவார வகுப்புகளை நடத்தவிருக்கிறார். இன்று பிற்பகல் 4 மணிக்கு நாவலர் மண்டபத்தில் பெண்களுக்கும் நாளை பிற்பகல் 4 மணிக்கு ஆண்களுக்கும் நடைபெறும். நெல்லியடி மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு பெண்களுக்கும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு ஆண்களுக்கும் வகுப்புகள் நடத்தப்படும்.

## 'பொருளாதார சுதந்திரம் ஏற்படவேண்டும்'

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

உணவு உற்பத்தியில் சுயதேவையைப் பூர்த்திசெய்வதுடன் திருப்தியடையாது பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் நாம் முயற்சிக்க வேண்டும். பொருளாதாரச் சுதந்திரம் மூலமே தமிழினம் உண்மையான விடுதலையைப் பெற முடியும்' என்று உரும்பராய் இளைஞர் விவசாயக் கழகத்தின்முதல் உற்பத்தி விற்பனைப் பண்டமான தக்காளிப்பழ ஜாம் முதற் போத்தலை வாங்கிய திரு. ஆ. சேனாதிராசா கூறினார்.

## கி. மு. சங்க கோரிக்கை

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை முற்சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள கடற்பாலம் உடைந்துள்ளமையால் கடல் நீர் நன்னீர் நிலத்துக்கு புகுவதால் அணைக்கட்டுத் திட்ட நோக்கம் நிறைவேறாது நன்னீர்நிலம் உவர் நிலமாக மாறி வரும் தன்மை ஏற்பட்டுள்ளது. இதனைப் போக்க ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சரவணை கிராமமுன்னேற்றச் சங்கம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி ஆசிரிய கலாசாலை விளையாட்டுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டுவிழா விரிவுரையாளர் திரு. ஆர். ஜே சேதுகாவலர் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விளையாட்டுவிழாவில் ஆண் பெண்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விபரம் வருமாறு:

## பெண்கள் போட்டிகள்

கிரிக்கெட் பந்து எறிதல்: திருமதி பாலசுப்பிரமணியம், செல்வி எஸ். சிற்றம்பலம், செல்வி எல். சங்கரப்பிள்ளை.

நீளம்பாய்தல், திருமதி எஸ் இராஜசுந்தரம், செல்வி எஸ். சிற்றம்பலம், செல்வி எஸ். செல்லத்துரை.

குண்டெறிதல்: செல்வி எஸ். சிற்றம்பலம், திருமதி எம். ரி. ஏ. ஜொங்கீர், திருமதி ஜீவரத்தினம்.

ஈட்டி எறிதல்: செல்வி எஸ். சிற்றம்பலம், செல்வி ஜி. செல்லத்துரை, செல்வி டி. இராஜதுரை.

கயிறடித்தல்: செல்வி எஸ். ஜி செல்லத்துரை, செல்வி எஸ். பரமலிங்கம்.

75 யார் ஓட்டம்: செல்வி எல். சங்கரப்பிள்ளை, செல்வி எல். பரமலிங்கம், செல்வி ஜி. செல்லத்துரை.

100 யார் ஓட்டம்: செல்வி எல். சங்கரப்பிள்ளை, செல்வி எஸ். பரமலிங்கம், செல்வி ஜி. செல்லத்துரை,

200 யார் ஓட்டம்: செல்வி எல். சங்கரப்பிள்ளை, செல்வி எஸ். பரமலிங்கம், செல்வி ஆர். சண்முகம்.

நிதானஓட்டம்: திருமதி பி. பாலசுந்தரம், செல்வி ஆர். சிவகுருநாதன், செல்வி ஐ. குணசேகரம்.

தடை ஓட்டம்: திருமதி தம்பிரட்னம், செல்வி சிவகுருநாதன், திருமதி வெனிசிலோஸ்,

4X100 யார் அஞ்சல் ஓட்டம்: விஞ்ஞானப்பகுதி, ஆங்கில வர்த்தகம் பகுதி.

## ஆண்கள் போட்டிகள்

கெந்திப்பாய்தல்: திரு. கே. குலராஜேந்திரன், திரு. ஏ. எல். எம். ஹஷிம், திரு. வி. ரி. ராஜேந்திரன்.

800 யார் ஓட்டம்: திரு. சி. ராஜேஸ்வரன், திரு. கே. குலராஜேந்திரன், திரு. என். கலைதாசன்.

ஈட்டி எறிதல்: திரு. ஈ. இராஜசிங்கம், திரு. எம். மன்மதராசா, திரு. எஸ். பாலசுந்தரம்.

குண்டெறிதல்: திரு. எஸ். பாலசுந்தரம், திரு. எம். மன்மதராசா, திரு. ஈ. அரியசிங்கம்.

உயரம்பாய்தல்;- திரு கே. குலராஜேந்திரம், திரு. ஏ. எல். எம். ஹறிம், திரு. வி. ரி. ராஜேந்திரன்.

ஈட்டி எறிதல்;- திரு. சி. ராஜேஸ்வரன், திரு. ஈ. அரியசிங்கம், திரு. எஸ். பாலசுந்தரம்.

400 யார் ஓட்டம்:- திரு. சி. ராஜேஸ்வரன், திரு. கே. குலராஜேந்திரன், திரு. எம். ஏச். ஏ. றேவ்.

நீளம் பாய்தல் :- திரு. எல். எம். ஹஷின், திரு. கே. குலராஜேந்திரன், திரு. எஸ். கே. மகாலிங்கம்.

100 யார் ஓட்டம்:- திரு. கே. குலராஜசிங்கம், திரு. எஸ். கே. மகாலிங்கம், திரு. எம். ஏச். ஏ. றவூவ்

200 யார் ஓட்டம்:- திரு. கே. குலராஜேந்திரன், திரு. என். கலைதாசன், திரு. எம். எச். ஏ. றவூவ்.

1500 யார் ஓட்டம்:- திரு. சி. ராஜேஸ்வரன், திரு. வி. தனய்யா, திரு. எம். எச். ஏ. றவூவ்.

தடை ஓட்டம்:- திரு. கே. சபாரத்தினம், திரு. வி. கே. வுத்தம்பிக்பிள்ளை, திரு. என். கலைத்தாசன்.

4X100 யார் அஞ்சல் ஓட்டம்:- ஆங்கிலவர்த்தகக்கைப் பணிப் பகுதி, விஞ்ஞான வீட்டு வேலைப் பகுதி.

[வி. நி]

## ஐ. வி. கழகம் வென்றது

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தினரால் லேடன் வெற்றிக் கிண்ணத்திற்காக நடாத்தப்படும் கரபந்தாட்டப் போட்டியில் ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரும், புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக் கழகத்தினரும் கலந்து கொண்டனர்.

ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினர் வெற்றிபெற்றனர். புள்ளி விபரம் 15-12, 15:8. இப்போட்டிக்கு ஆசிரியர் நடராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# இந்திய கிரிக்கெட் காப்டன் பற்ரேடியும் பாகிஸ்தான் ஹனீபும் 'விஸ்டன்' தெரிவில் இடம் பெற்றுள்ளனர்

லண்டன், ஏப்ரல் 5

பிரசித்திபெற்ற 'விஸ்டன்' விளையாட்டுச் சஞ்சிகை, இவ்வருடத்துக்கான ஐந்து கிரிக்கெட் வீரர்களாகத் தெரிவுசெய்யப்படுபவர்களில், இந்திய கிரிக்கெட் காப்டன் பற்ரேடி நவாப் இடம்பெற்றுள்ளார். 'விஸ்டனி'ன் 105வது பதிப்பில் இன்று இடம்பெற்றுள்ள பற்ரேடி நவாப்பின் தந்தையும் 1932ல், அச்சஞ்சிகையின் வருடாந்த பதிப்பில் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 'விஸ்டன்' தெரிவுசெய்துள்ள மற்றமொரு கிரிக்கெட் வீரர், பாகிஸ்தான் காப்டன் ஹனீப் முகம்மது ஆவசர்.

## அதிபர்கள் பேட்டி காண்பார்கள்

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

மே மாதம்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்றங்களை ரத்துச் செய்யவேண்டுமென வடபகுதிக் கல்லூரி அதிபர்கள் கல்வி அதிகாரிகளை பேட்டிகாண விருப்பதாசு தெரிகிறது. வருட மத்தியில் இம்மாற்றங்கள் செய்யப்படுவதால் கல்வியிலும் நிர்வாகத்திலும் பெரும் சீர்குலைவுகள் ஏற்படுமென்றும் ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியரின் பதவிகள் இதுவரை நிரப்பப்படவில்லை யென்றும் இவர்கள் சுட்டிக்காட்டவிருப்பதாகத் தெரிகிறது.

## மெய்வல்லுனர் போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கிடையேயான மெய்வல்லுனர்போட்டி இவ்வருடம் முதல் தடவையாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது இப்போளுடிகளில் பட்குபற்றிய ஆசிரியர்களின்தொகை வெகு குறைவாக இருந்தது போட்டி முடிவுகள் வருமாறு.

100 மீற்றர்ஓட்டம்- இ. சுப்பிரமணியம் (புற்றளை வித்தியாலயம்) க. முருகேசு (யார்கரு விநாயகர் வித்தியாசாலை) குண்டெறிதல்- க. சதாசிவம் [புற்றளை வித்தியாலயம்], நீளம்பாய்தல்- க. சதாசிவம் (புற்றளை வித்தியாலயம்] 100 மீற்றர் நடை- க. சதாசிவம் [புற்றளை வித்தியாலயம்]

## 4 மணி நேரம் தாமதித்து விமானம் புறப்பட்டது

குரும்பசிட்டி, வெள்ளி

இயந்திரக்கோளாறு காரணமாக கடந்த புதன்கிழமை கொழும்பிலிருந்து பலாலி ஊடாக திருச்சிக்குச் சென்ற விமானம் வழக்கத்திற்கு மாறாக சுமார் நான்கு மணித்தியாலங்கள் தாமதித்து பலாலியிலிருந்து கிளம்பிச் சென்றது. வழமையாக காலை 8-20 மணிக்கு பலாலி வந்துசேரும் இவ் விமானம் குறிப்பிட்ட தினம் காலை 10-30 மணிக்கு வந்துசேர்ந்தது. இதனால் இந்தியா பயணமாகவிருந்த பிரயாணிகளுக்கு காலதாமதம் எடுத்தது.

பின்னர் கொழும்புக்கு செல்லவிருந்த பிரயாணிகளும் தாமதித்து வழமைபோல் 12.30 மணிக்கு பிரயாணமாக முடியாது போய் விட்டது,

## "மாற்ற வேண்டாம்"


அடம்பன், வெள்ளி

காணி அபிவிருத்தி ஓவசியராகக் கடமையாற்றும் திரு. ஏ. ஆர். குளாஸின் மாற்றத்தை தடைசெய்யுமாறு ஆட்காட்டிவெளி கிராமமக்கள் மகஜர் ஒன்றை அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ளார்கள். திரு. ஏ. ஆர். குலாஸ், இப்பகுதியில் இரண்டுவருடங்களாக சேவையாற்றி வருகிறார்.


# ரேக்*


நேரடிக் களை கொல்லி உபயோகித்து

# நெல் விளைவைப் பெருக்குங்கள்



ரேக்கின் நேரடித் தொழிற்பாட்டால் களைவகைகள் வேரோடு அழிந்து போகின்றன. களைகளின் இலைகளை வாட்டி எரிப்பதோடு நின்றுவிடாமல், அவை பின் வளர்ந்து நெற்பயிர் வளர்ச்சியைப் பாதிக்காமலும் தடுக்கின்றது.

கோழிச்சூடன், சந்தனக் கோரை, முடிச்சுக் கோரை, கிரிந்தி, பத்தடெல்லா, பிங்குரு முதலான களைவகைகளையெல்லாம் ரேக் பூண்டோடு அழிந்துவிடும். போட்ட உரப் பசளை முழுவதும் நெற் பயிருக்கே கிடைப்பதனால், அது ஓங்கி வளர்ந்து மிகுதியான விளைவு தருகின்றது.



நேரடிக் கொல்லியான ரேக்கினையே உபயோகியுங்கள். நெல் விளைவு பெருகும்.

Monsanto

* மொன்சந்தோ கொம்பனியின் வர்த்தகக் குறி



உங்களுக்குத் தேவையான

## றெடிமேட் உடுப்பு

வகைகளுக்கும்

மற்றும்

உங்கள் தேவைக்கு

எங்களை நாடுங்கள்!

# சிவரூம்ஸ்

(நூதனசாலைக்கு முன்பாக)

12, மெயின் வீதி — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர மக்கள் வாரம் கட்டுரை, கவிதை போட்டி

## 'ஈழநாடு' அளிக்கும் வாய்ப்பு

யாழ்ப்பாண நகரில் வாழும் மக்களுக்கு, தங்கள் நகரின் சிறப்பிலும் அதன் முன்னேற்றத்திலும் ஆர்வமும், அக்கறையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் அடுத்த மாத முற்பகுதியில் 'நகர மக்கள் வாரம்' கொண்டாடப்பெறவிருக்கிறது. இவ்வாரத்தையொட்டி 'ஈழநாடு' கட்டுரை, கவிதைப் பொட்டியொன்றை ஒழுங்குசெய்துள்ளது.

## 'அழகு வாய்ந்த யாழ். நகர்'

இதுதான் கட்டுரை, கவிதைப் போட்டியின் தலைப்பு. இப்போட்டி மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 14 வயதுக்குட்பட்டவர்கள் 300 முதல் 500 சொற்கள்வரை அடங்கியதாக கட்டுரை எழுதவேண்டும். 19 வயதுக்குட்பட்டவர் 500 முதல் 750 சொற்கள்வரை அடங்கியதாக கட்டுரையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

வயதுக் கட்டுப்பாடு எதுவும் இல்லாத பொதுப் போட்டியில் கலந்துகொள்பவர்கள் தங்கள் கட்டுரையை 750 சொற்களிலிருந்து 1000 சொற்களுக்குள் அடக்கிக்கொள்ளவேண்டும்.

கவிதைப் போட்டியில் கலந்துகொள்பவர்களும் இயன்றவரை சிறிய கவிதைகளையே இயற்றுவது விரும்பத்தக்கது.

இப்போட்டி சம்பந்தமான இதர விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

கட்டுரை, கவிதைகளை 'நகர மக்கள் வாரப் போட்டி,' ஆசிரியர், ஈழநாடு, த. பெ. எண்:49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

## 10-ல் கூடும்

மல்லாவி, வெள்ளி
துணுக்காய் காரியாதிகாரி பிரிவில் உள்ள 12 கிராம முன்னேற்றச் சங்கங்களும் 3 மாதர் சங்கங்களும் இணைந்து செயல்படும் துணுக்காய்ப் பிரிவுக் கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் இம்மாதம் 10-ம் திகதி நடைபெற உள்ளது.

## மாவட்ட சபை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முஸ்லீம் சமூகத்தவரும், கத்தோலிக்க சமயத்தவரும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்த பின்னர் சிலவற்றை கையளிக்காது தாமே நிர்வகித்து வருகின்றனர். இவ்வாறான செயலை சைவசமயத்தவர் செய்யத் தவறிவிட்டனர். இராமநாதன் விட்டுச் சென்ற சொத்துக்கள் தகுந்தவாறு பாதுகாக்கப்பட்டால் சைவ சமயத்தவரும் இவ்வாறு நிர்வகிக்கலாம். எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தமது சொந்தப் பலத்திலேயே தங்கியிருத்தல் வேண்டும். எதற்கும் அரசாங்கத்தை நம்பியிருத்தல் கூடாது. கல்வி கலாச்சார அமைச்சு ஏனைய சமூகத்தவருக்கு கலாச்சாரத்துறை முன்னேற்றத்துக்கு வழங்கும் சலுகைகள் போன்று தமிழ் சாகித்தியத்தாருக்கும் வழங்குதல் வேண்டும்.

இவ்விழாவில் திரு. வ. சரவணமுத்து, திரு. எஸ். சிவஞானரத்தினம் ஆகியோரும் பேசினர். மாணவிகளின் இன்னிசை விருந்தும் இறுதியில் இடம் பெற்றது.

## அமெரிக்க...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலைநாட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாகாணகவர்னர்கள் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

### மறைவுக்கு அனுதாபம்

டாக்டர் கிங் மறைவையிட்டு அமெரிக்க உப ஜனாதிபதி திரு. ஹம்ப்ரியும் தமது கவலையை வெளியிட்டுள்ளார்.

ஐ. நா. உதவிக் காரியதரிசியும் நீக்ரோத் தலைவர் ஒருவருமான டாக்டர் ரால்ப் பஞ்ச், டாக்டர் கிங் சுட்டுக் கொல்லப்பட்டது அமெரிக்க இன ஒற்றுமைக்குப் பலத்த ஓர் அடியாகும் என்று கூறியுள்ளார்.

### காந்திஜியின் வழியில்

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 'உலகம் ஒரு தலைசிறந்த சமாதான வீரரை இழந்துவிட்டது' என்று கூறினார். மகாத்மா காந்தியின் வழியைப் பின்பற்றிய டாக்டர் கிங் காந்தியின் வழியிலேயே மறைந்துமுள்ளார் எனத் திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

டாக்டர் கிங்கின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இந்தியலோகசபையில் ஒரு நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னாள் ராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் 'உலக சமாதானத்துக்கு உழைத்த ஒரு வீரரின் உயிர் பிரிந்துவிட்டது' என்றுகூறியுள்ளார்.

டாக்டர் கிங் சுடப்பட்ட சம்பவம் ஒருபெரும் சோகச் சம்பவம் என்று சுதந்திரா கட்சித் தலைவர் ராஜாஜி குறிப்பிட்டார்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் 14-ம் திருவிழாவாகிய இன்று மாலை மணிமுதல் இரவு 7-30 மணிவரை நல்லை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் சம்பூரண இராமாயணக்கதாப் பிரசங்கத் தொடரில் "இன்று போய் நாளைவா" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கமும், இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், பின் சுவாமி நாகவாகனத்தில் வெளி வீதி வலம் வருதலும் நடைபெறும்.

## போட்டியின்றி தெரிவு

யாழ்ப்பாணம், சனி
பல்லவராயன் குள கிராம சபைத் தேர்தலுக்கான 1-ம் வட்டாரத்துக்கு அபேட்சகர் நியமனப்பத்திரம் நேற்று முன்தினம் திரும்பவும் தாக்கல் செய்யப்பட்டபோது திரு. சின்னத்தம்பி நல்லைநாதன் போட்டியின்றித்தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இக்கிராமசபைத் தேர்தல் அபேட்சகர் பத்திரங்கள் முன்னர் தாக்கல் செய்யப்பட்டபோது 1-ம் வட்டாரத்துக்கு எவரும் போட்டியிட முன்வராததாலேயே திரும்பவும் இது நடைபெற்றது. [கா. நி.]

## கச்சாய் கி. சபை தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி
கச்சாய் கிராமசபைத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்ற போது பின் வருவோர் வெற்றி பெற்றனர்.

1-ம் வட்டாரம்: திரு. மாப்பாணி தம்பு, 2-ம் வட்டாரம்: திரு. வைத்தியாம்பிள்ளை நீக்கிளாஸ், 3-ம் வட்டாரம்: திரு. கணபதிப்பிள்ளை கந்தையா, 4-ம் வட்டாரம்: திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை, 5-ம் வட்டாரம்: திரு. கந்தையா குமாரவேலு [போட்டியின்றித் தெரிவு], 6-ம் வட்டாரம்: திரு. வைத்தியலிங்கம் கனகரெத்தினம், 7-ம் வட்டாரம்: திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி [போட்டியின்றித் தெரிவு], 8-ம் வட்டாரம்: திரு. ஏ. பி. சிதம்பரப்பிள்ளை, 9-ம் வட்டாரம்: திரு. இ. செல்லையா, 10-ம் வட்டாரம்: திரு. எஸ். கந்தையா, 11-ம் வட்டாரம்: திரு. முத்தன் தில்லையம்பலம். [கா. நி.]

## தொலைபேசி சீராக இல்லை

அளவெட்டி, வெள்ளி
காங்கேசன்துறைப் பகுதியில் தொலைபேசி சேவை சீராக இயங்குவதில்லையாம். இதனால் அத்தியாவசிமான செய்திகளை அனுப்புகிறவர்களும், பொலிசாரும் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக தொலைபேசி அதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

## பாராட்டு

புலோலி, வெள்ளி
கட்டைவேலி ஞானசாரிய கல்லூரியின் பெற்றோர்-ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது உபசபாநாயகராக தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரத்தைப் பாராட்டி பாராட்டு செய்தி வாசித்து அனுப்பப்பட்டது. சில கோரிக்கைகளை அரசினரி[illegible] [illegible]னிக்கப்பட்டது.

# 'வியட்னும் யுத்தத்தில் ஏகாதிபத்தியத்திற்குத் தோல்வி'

## சண்முகதாசன் விமரிசனம்

யாழ்ப்பாணம், சனி
"வியட்னும் யுத்தத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தோல்வியடைந்ததுதான் ஜோன்சன் வருகிற முறை ஜனாதிபதிதேர்தலில் போட்டியிடமாட்டேன்என்று அறிவித்தமைக்குக் காரணம்இது சோஷலிசத்துக்கு உலக அரங்கில் வெற்றி கிடைத்து வருகிறதற்குஅறிகுறி இந்த 20-ம் நூற்றாண்டில், ஏகாதிபத்தியம் முடியும் காலத்தில், இங்கு தீண்டாமையிருப்பது வெட்கத்தையும், வேதனையையும் தருகிறது. இவற்றை ஒழிக்கவே கம்யூனிஸ்ட் கட்சி பாடுபடுகிறது"

மேற்கண்டவாறு கம்யூனிஸ்ட் கட்சி (பீகிங்சார்பு) தலைவர் திரு. சண்முகதாசன், கம்யூனிஸ்ட் கட்சி வாலியர்சங்க 1-வது ஆண்டு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. இக்பால் தலைமையில நடந்த கூட்டத்தில் திரு. சண்முகதாசன் தொடர்ந்து பேசுகையில், "இலங்கையில் முதலாளித்துவ சமுதாயம், ஜனநாயகம் என்ற போர்வையில் பலாத்காரத்தை நடாத்துகிறது. இவர்களால் தீண்டாமையை அகற்றமுடியாது.

ஸ்ரீமா யாழ்ப்பாணம் வர விரும்பது உண்மையில் சிறுபான்மைத் தமிழரின் அனுதாபம் கொண்டல்ல. தங்கள் சுயநலத்துக்காகவே" என்றார்.

கம்யூனிஸ்ட் கட்சியில் சமீபத்தில் சேர்ந்த திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசுகையில், ஐக்கிய தேசியக் கட்சியோ அன்றி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியோ சிறுபான்மை மக்களின் பிரச்னைகளைத்தீர்த்துவிடமாட்டாது அவர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்த கம்யூனிஸ்ட் கட்சியொன்றே அன்றிலிருந்து இன்றுவரை போராடி வருகிறது. இதனாலேயே தான் கம்யூனிஸ்கட்சியில் சேர்ந்தேன் என்றார். (கா. நி.)

## கம்யு. எம்பிக்கு வரவேற்பு

குரும்பசிட்டி, வெள்ளி
கம்பஹா எம. பி திரு. எஸ். டி. பண்டாரநாயகா, இலங்கை கம்யூனிஸ்ட் [சீனசார்பு] கட்சித்தலைவர் திரு. என். சண்முகதாசன் சகிதம் பலாலி விமானமூலம் இன்று பலாலி வந்தடைந்த போது செஞ்சட்டை அணிந்திருந்த பெருந்தொகை வாலிபர்களால் குதூகலமாக வரவேற்கப்பட்டார்.

வாலிபர்கள் மாவோ சின்னங்களை அணிந்திருக்கக் காணப்பட்டனர். சிவப்பு கொடிகள் தாங்கிய மோட்டோர் கார்கள் பவனி செல்ல திரு. பண்டாரநாயகா யாழ். நகர் அழைத்துச் செல்லப்பட்டார். விமானநிலையத்தில் பொலிஸ் பந்தோபஸ்து பலப்படுத்தப் பட்டிருந்தது.

திரு. பண்டாரநாயகா வந்திருந்த விமானத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோரும்வந்தனர்.

# 'விவசாயப் படையில் சேரபயப்படாதீர்'

உடுப்பிட்டி, வெள்ளி
அண்மையில்கொலையுண்ட விவசாயப்படை வீரர் சிவலோகநாதனின் மர்ம மரணம் பற்றிக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு விவசாயப்படையைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் பதிலளிக்கையில்மேற்படிசம்பவம்குறித்துத்தாம் வேதனைப்படுவதாகவும் விசாரணை நடாத்தப்பட்டுச் சம்பந்தப்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இக்காரணத்தை வைத்துக் கொண்டு வாலிபர்கள் விவசாயப்படையில் சேர்வதற்கு பயந்து தயங்க வேண்டாமென்றும் கூறினர்.

# மேலும் 10,000 பேர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர்?

## பொதுச்சபை ஆராய்ந்து முடிவுசெய்யும்

கொழும்பு, வெள்ளி
இலங்கை வர்த்தக ஊழியர் சங்க ஊழியரின் வேலைநிறுத்தத்தில்தொழிலாளர்களையும் சேர்த்துக் கொள்வது குறித்து இலங்கை வர்த்தக ஊழியர் சங்க பொது சபை கூடி நாளை இங்குஆராய்கிறது. இந்தப்பத்தாயிரம் தொழிலாளர்களையும், இப்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்24000 ஊழியர்களுடன்சேர்த்துக்கொள்வதாஎன்பது குறித்து நாளை பொதுச் சபை ஆராய்ந்து, நாளை மறுதினம் 8ம் திகதி முடிவொன்றை எடுக்கும்.

## மனைவியை வெட்டினாராம்

அளவெட்டி, வெள்ளி
கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட தகராறு கத்திவெட்டில் முடிந்ததாம். பலாலியைச் சேர்ந்த கைத்தான் ஞானப்பிரகாசம் என்பவருக்கும் அவரது மனைவி திரேசம்மாவுக்குமிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராற்றில் கணவன் மனைவியைக் கத்தியால் வெட்டினாராம்.

காயங்களுக்குள்ளான திரேசம்மா காங்கேசன் துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் வி. வி. செல்லையாதைத் தான் ஞானப்பிரகாசத்தை கைது செய்து மல்லாகம் நீதிபதி முன்னிலையில் ஆஜா செய்துள்ளார்.

## டிராக்டரில் தீ

இமையாணன், வெள்ளி
உழவு யந்திரம் ஒன்று தீப்பிடித்த சம்பவம் ஒன்று இன்று நெல்லியடிச் சந்தியில் நடைபெற்றுள்ளது. சுமார் ஐந்துமணியளவில் நெல்லியடிச் சந்தியில் ஓர் கடைஓரமாக இவ் உழவு இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டபோது திடீரென இயந்திரத்திலிருந்து தீப்பிடித்ததாம். அப்பொழுது அங்கு நின்ற மக்களின் உதவியினாலும், ஒரு லொறியில் இருந்த மணலின் உதவியினாலும் இத் தீ அணைக்கப்பட்டது.

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா

இக்கல்லூரி ஆசிரியர் திரு. ச. கந்தையா அவர்களின் அகால மரணம் காரணமாக இரண்டாந் தவணைக்குப் பின்போடப்பட்டுள்ளது. 704

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிர்வாகத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org